உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 41] துன்மதி ஆண்டு மார்கழித்திங்கள் 10-1-82 [இதழ் 2

தம்மைச் சூழ்ந்து தானியக் கதிர்கள் விளைந்து முதிர

தம் கையிலும் தானியக் கதிரேந்தி,



உலகெலாம் பசியும் - பிணியும் நீங்கி - வசியும் வளனும் சுரக்க அருள்பாலிக்கும்

அன்னை தானியலட்சுமியின் திருக்கோலம்

உழவர் திருநாளாகிய பொங்கள் திருநாளை முன்னிட்டு

இவ்விதழில் காட்சிதருகிறது.

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—[★]—

தனுவாதி ஆக்கிஉயிர்
 தன்னிலிசைத் தாட்டி
எனுமாக மங்கருணை
 என்றுந் — தினமுநீ
ஆச்சரியம் யானெனதென்
 ருட்டல்மறந் தொன்றுரைத்தல்
ஆச்சரியம் சொக்கநாதா.

— சொக்கநாத வெண்பா. 84

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்

உ

குருபாதம்

" ஞானசம்பந்தம் "

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 41 || 10–1–82 || இதழ் 2

உட்பொருள்

—( )—

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 10
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 12
ஆண்டுச்சந்தாவெளிநாடு ரூ. 23
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125

Acc. NO. 34365

உ
சிவமயம்

தருமையாதீனம்
சமய வளர்ச்சித் திங்கள் இதழ்
சந்தாதாரர்களுக்கு
ஓர் அறிவிப்பு

தருமையாதீனத்திலிருந்து மாதந்தோறும் வெளிவரும் 'ஞானசம்பந்தம்' கற்போர் மனத்தைக் கவரும் சிறந்த திங்கள் இதழாகும். சமயம், இலக்கணம், இலக்கியம், மக்கள் வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்கங்கள், எதிர்காலம் ஆகியவற்றுடன் வெளிவருவது. சமய உணர்வுகளை உணர்த்துவதற்குரிய அரிய இவ்விதழ் நாற்பதாண்டுகள் நிறைவுபெற்று நாற்பத்தோராம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

சந்தாதாரர்கள் மறவாமல் ஆண்டுக்கட்டணம் செலுத்தியும், புதிதாகச் சேர்வோர் பின்வரும் முகவரிக்கு ரூ. 10. அனுப்பிப் பெற்றும் படித்துப் பயன் அடையலாம்.

இவ்வறிவிப்புப்படி மலர்ஆரம்பத்தில்பணம்அனுப்பாமல் பிறகு நிறுத்தப்பட்டபின் கடிதம் எழுதுவதைத் தவிர்க்கவே முன் இரண்டு இதழ்களிலும் ஞாபகப் படுத்தியும் இன்னும் சந்தாத்தொகைகள் பெறப்படவில்லை. இவ்விதழ்மூலம் நினைவூட்டுகின்றோம். **தனி அறிவிப்பை எதிர்பாராமல் சந்தாவினை அனுப்பக் கோருகிறோம்.**

தடையில்லாமல் இந்நூலைக் கற்க விரும்புவோர் ஆயுள் சந்தா ரூ. 100. செலுத்தித் தொடர்ந்து தாமும் தனக்குப்பின் விரும்பும் ஒருவருக்கு எழுதிவைத்தும் ஞானசம்பந்தம் பெறலாம். இதுவரை 853 அன்பர்கள் ஆயுள்சந்தா கட்டி ஞானசம்பந்தத்தைப் பெற்றுப் படித்து வருகின்றனர்.

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா	(உள்நாடு)	...	ரூ.	10—00
,,	(சிலோன்)	...	ரூ.	12—00
,,	(வெளிநாடு)	...	ரூ.	23—00
ஆயுள் சந்தா	(உள்நாடு)	...	ரூ.	100—00
,,	(வெளிநாடு)	...	ரூ.	125—00

விளம்பரம்

பின் அட்டை வெளிப்பக்கம்	**2-கலர்**	**ரூ.**	**300—00**
பின் அட்டை உட்பக்கம்	**1-கலர்**	**ரூ**	**200—00**
இதழின் உட்பக்கம்	**,,**	**ரூ.**	**100—00**

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி :

செயலாளர்,
ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மாயூரம் - 609 001
தஞ்சை மாவட்டம்.

குறிப்பு :-

ஆயுள் சந்தா செக் அல்லது டிராப்ட் அனுப்ப **"ஞானசம்பந்தம் தருமையாதீனத் திங்கள் இதழ்"** என்கிற தலைப்பில் அனுப்பவேண்டும்.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 41 | துன்மதி - மார்கழி - 10—1—82 | இதழ் 2

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

ஐம்பதும் - நூறும்

தில்லைச்சிதம்பரம் :

ஒருநாட்டிற்கோ, நகரத்திற்கோ அன்றி ஓர் சிற்றூர்க்கோ பெருமையும் சிறப்பும் அமைவது, அங்கேவாழும் மக்களின் பெருமையையும் சிறப்பையும் பொருத்தே அமைவது. 'எவ்வழி ஆடவர் நல்லர் அவ்வழி நல்லை வாழியநிலனே' என இதனை ஔவையாரும் விளக்கிக்கூறுகின்றார். தமிழகத்தின் பெருமை மிக்க தலங்கள் பல. அவற்றின் பெருமைக்குக் காரணமான சிறப்புக்களும் பல்வகைய. இத்தகு சிறப்பு மிக்க திருத்தலங்களுள் சைவப்பெருமக்களால் 'கோயில்' என்று சிறப்பித்துப் போற்றப்பெறும் தில்லைச்சிதம்பரம் முதன்மையானது. எல்லையற்ற சிறப்புமிக்க தில்லைக்கு இங்கே கலைவளர் மாள்கையாகத் திகழும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அழகுக்கோர் அழகு சேர்க்கிறது. இதனை அரைநூற்றாண்டுக்குமுன் தோற்றுவித்த செட்டிநாட்டரசர் திரு. அண்ணாமலைச் செட்டியார் அவர்களை நினைவுகூரும்போது நெஞ்சம் விம்மிதமுற்று மகிழ்கிறது.

அண்ணாமலைநகர்: தனியூரா?

யாரும் எண்ணிப்பார்க்காத அக்காலத்தில் அலகில்கலையின் துறைக்கு எல்லை ஆடுங்கழலே எனத் தெளிந்து தில்லையின் எல்லையாகிய திருவேட்களத்திலே இப்பல்கலைக் கழகத்தைக் கண்டார் இராஜா. சர். அண்ணாமலைச் செட்டியார். இக்கலைக் கழகம் காண்டற்கு மூலம் நமது பரமாசாரியராகிய திருஞான சம்பந்தரேயாவார். ஞானசம்பந்தர் சிதம்பரத்தலமே கோயிலாகக் கருதப்படுதலால் அங்குத்தங்காமல் எல்லையில் உள்ள திருவேட்களத்தில் தங்கினர். திருவேட்களத்தில் அருளிய அவரது தேவாரத்தில் பதினொருதிருப்பாடல்களிலும் வேட்கள நன்னகர் என்றே குறிப்பிட்டுள்ளார். அவர் அருள்வாக்கின் படியே ஆயிரத்து இருநூறு ஆண்டுகட்கு இப்பால் இத்தலம் நகரத்தாராகிய அ ண் ணா ம லை அரசரால் கலைக்கோயில்கள் நிறைந்த அண்ணாமலைநகராகத் திகழ்கிறது.

பாரதிவழியில் பல்கலைக்கழகம் :

பொன்விழாக்கண்ட அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை நிறுவிய அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டுவிழா அண்மையில்நிகழ்ந்தேறியது. திரு. செட்டியார் அவர்களின் தோற்றமும், அமரகவி பாரதியாரின் தோற்றமும் சற்றேறக்குறைய ஒரேகாலத்தில் அமைந்திருத்தல் நம்சிந்தனையைத் தூண்டுகின்றது. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் நமது நாட்டின்போக்கினைப் பாரதியாரே படம்பிடித்துக்காட்டுகின்றார்.

> " .... இந்த
> வையத்து நாட்டில் எல்லாம்
> தாழ்வுற்று வறுமை மிஞ்சி
> விடுதலை தவறிக் கெட்டுப்
> பாழ்பட்டு நின்றதாமோர்
> பாரத தேசம் ...... "

என்பது அவரது மதிப்பீடு. இந்த இரங்கத்தக்க நிலைக்குக் காரணம் என்ன என்பதையும் பாரதியாரே விளக்குகின்றார்.

> " கஞ்சி குடிப்பதற் கிலார் – அதன்
> காரணங்கள் இவைஎனும் அறிவுமிலார் "

அறியாமையே அன்றையசமூகத்தின் சாபக்கேடு. இதனால்தான் பாரதி 'வீடுதோறும் கலையின் விளக்கம்' வேண்டுமென்று தம் விருப்பத்தைத் தெரிவித்தார். 'அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' என ஆர்ப்பரித்தார். 'பள்ளித்தலம் அனைத்தும் கோயில் செய்குவோம்' எனப்

பண்பாட்டு நெறி வகுத்தார். 'தேடுகல்வி இலாததோர் ஊரைத்தீயினுக்கு இரையாக மடுக்க' வேண்டுமென்று ஆவேசக் கவிதைதந்தார். பாரதியின் இந்த எண்ணங்களுக்கு அக்காலத்தில் ஓர் உருவம்தந்த வித்தகராக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தோற்றிய செட்டிநாட்டரசரை, நினைவுகூர்ந்து தலைநிமிர முடிகிறது.

பல்கலைக்கழகம் :

இன்று, கல்வியின் தேவையை நாடு அறிந்திருக்கிறது. கல்விபற்றிய சிந்தனையே மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறாத காலத்தில் தாம் முயன்று ஈட்டிய முப்பதுலட்சம் ரூபாயை முலதனமாகக்கொண்டு ஒரு பல்கலைக்கழகத்தைத் தோற்ற வேண்டுமென்று பிறந்த சிந்தனையே வியக்கத்தக்கது. அந்தச்சிந்தனையின் செயல் வடிவமாகப்பிறந்து அரைநூற்றுண்டில் ஆல்போல் தழைத்து, அறுகுபோல்வேரோடி, பல்லாயிரக்கணக்கான பல்துறை அறிஞர்களை உருவாக்கி உலகுக்கு வழங்கிய பெருமிதத்தில் பொன்விழாக்கண்ட அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆணிவேராக'விளங்கிய திரு. அண்ணாமலை அரசர் அவர்களை நினைக்கையில் நம் நெஞ்சம் நன்றிப் பெருக்கால் கசிகிறது. இன்று முப்பதிற்கும் மேற்பட்ட கலை, அறிவியல், சட்டம், பொறியியல் போன்ற பல்துறையில் மேல் நிலைக் கல்வியையும், ஆராய்ச்சி வாய்ப்புக்களையும் வழங்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி அதனைத்தோற்றுவித்த பெருந்தகையாளரின் உள்ளார்ந்த நல்லெண்ணத்தின் வெளிப்பாடாகவே தோன்றுகின்றது.

ஈத்துவக்கும் இன்பம் :

துணிவும், தன்னம்பிக்கையும்திரு. அண்ணாமலைச்செட்டியார் அவர்களின் இருகண்களாகத் திகழ்ந்தன. அவற்றை இன்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகக் குறிக்கோள் சின்னத்தில் காண முடிகிறது. நாட்டுக்கோட்டை நகரத்தார் 19 ஆம் நூற்றுண்டில் நலிவுற்றுநின்ற நூற்றுக்கணக்கான பாடல்பெற்றதிருக்கோயில் களைத் தம் சொந்தப் பொறுப்பில் புதுப்பித்து உலகுக்கு வழங்கிய பெருமைமிக்கவர்கள். சிவப்பணியோடு, கல்விப் பணியும் சிறக்கவேண்டுமென்ற உயர்நோக்கினை இம்மரபில் வந்த திரு. செட்டியார் அவர்கள் கொண்டிருந்தமை பல்லாயிரம் ஏழை மக்களின் வாழ்வில் ஒளிவீசக் காரணமாயிற்று. ஈத்துவக்கும் இன்பம் என்பதனைச் செல்வத்தில் மட்டுமின்றிக் கல்வியிலும் செயற்படுத்திக்காட்டிய பெருமை திரு. அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்கு உண்டு.

குறிக்கோள் வாழ்வு :

சில சிறந்த குறிக்கோள்கள் உடையவர்களால் மட்டுமே செயற்கரிய செயல்களை இயற்றமுடியும். திரு. அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் குறிக்கோள்கள் நாம் எண்ணிப் பெருமிதப்படத்தக்க வகையில் அமைகின்றன.

> " ஸ்ரீநடராஜப்பெருமானைத் தினந்தோறும்வணங்குவேன் ; அண்ணாமலை சர்வகலாசாலையின் வளர்ச்சியை ஒவ்வொரு நாளும் சிந்திப்பேன் ; தமிழ்நாடு எங்கும் தமிழ் இசைமுழங்க வேண்டும் என்பது என் ஆவல் ; ஈட்டலும் காத்தலும், வகுத்தலும் என் வாழ்க்கையின் குறிக்கோள் "

பக்தி, கல்விநாட்டம், தமிழ் இசைவளர்ச்சி, முயன்று ஈட்டி முறைப்பட வழங்க வேண்டுமென்ற முனைப்பு என்பனவற்றில் அவர்கள் கொண்டிருந்த பிடிப்பு, நம்மவர்களுக்கு வழிகாட்டும் வண்ணம் அமைகின்றன.

பட்டங்களுக்குச் சிறப்பு :

திருமயத்திலிருந்து – கானாடுகாத்தானுக்கு அஞ்சல் உறை ஏந்திச்சென்ற ஒரு காவலனை வழிப்பறிக்கொள்ளையர் மடக்கிக் கொள்ளையிட்டனர். தமது பகுதியில் நடைபெற்ற இந்த அடாத செயல்கண்டு குமுறித் தம்பொறுப்பிலேயே, கொள்ளையர்களைக் கண்டுபிடித்து உதவிய பெருமிதத்திற்காக ஆங்கிலேய அரசு திரு. செட்டியார் அவர்களுக்கு ' ராவ்பகதூர் ' பட்டம் வழங்கிக் கௌரவித்தது. பொதுநலத் தொண்டுகளுக்காக 'திவான்பகதூர்' ' சர் ' போன்ற பட்டங்கள் வழங்கப்பெற்றன. சென்னைப் பல்கலைக்கழகம் L. L. D என்ற கௌரவப்பட்டத்தையும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் D. Litt. என்ற பட்டத்தையும் வழங்கிச் சிறந்தன. திரு. செட்டியார் அவர்களின் குடும்பம் பரம்பரை அரசகுடும்பம் அன்று. இவரது நல்லறத்தொண்டுகளுக்காக ஆங்கில அரசு 4—3—1929 இல் அரசப்பட்டம் வழங்கி வழிவழியே அது நிலைக்க வழிகோலிற்று, பட்டங்களைக் கடந்த – பாராட்டுதல்களுக்கு அப்பாற்பட்ட திரு. செட்டியார் அவர்களுக்குப் பட்டங்கள் பெருமைதந்தன என்பதைவிட, இவர்களால் பட்டங்களுக்குச் சிறப்புச் சேர்ந்தன என்பதே பொருந்தும்.

தேடிப் பணிகொண்ட திறம் :

தமிழ், தமிழிசைவளர்ச்சியில் திரு. அண்ணாமலைச்செட்டியார் அவர்களின் தொண்டினைத் தமிழகம் நன்கு அறியும். தெலுங் கிசையே - கர்நாடக - தமிழ் இசையாகக் கருதப்பட்ட காலத்தில் தமிழ் இசைமரபுகளையும், இவற்றின் தொன்மையினையும் உலகறியச்செய்து, புதிய ஆக்கத்தைத் தமிழிசைக்கு வழங்கிய பெருமை திரு. செட்டியார் அவர்களின் தொண்டுகள் பல வற்றுள்ளும் தலையாயது. அவ்வத்துறையில் புலமை மிக்காரை அறிந்து, அவர்கள் தம்மைத் தேடி வரட்டும் எனக்காத்திராது, தாமே அவர்கள் வீடுதேடிச்சென்று, அவர்களைப்பணிகொண்டு கலை வளர்த்த எளிமை செட்டியார் அவர்களின் பெருமை களுக்குக் கட்டியம் கூறுவது. இவ்விருபதாம் நூற்றாண்டின் சிறந்த தமிழறிஞர்களில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றாதவர்களே இலர் என்னும் அளவிற்கு அனைவரையும் பயன் கொண்டு கலைவளர்த்த வள்ளலைப் பாராட்டுதல் தமிழர் கடன்.

நன்றியும் அறமும் :

திரு. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் வழியில் இன்று அப்பல்கலைக்கழகத்தைக் புரந்துவரும் அவர்களது :மூத்த குமாரர், ராஜா. சர். முத்தையா செட்டியார் அவர்களின் சீரிய முயற்சியால் பல்கலைக்கழகம் மேலும் மலைமேல் விளக்காகச் சிறந்து வருவது பெரிதும் மகிழ்ச்சிக்குரியது. காலமாறுபாடு களால் எழும்கருத்து வேறுபாடுகளைக் காரணங்காட்டி, இத்தகு அரும்பணியாற்றிவரும் பல்கலைக்கழக வளர்ச்சியைக்குலைக்க முயல்வோர் கண்டிக்கத் தக்கவர்கள். அவர்கட்கு ஓர் அறம் கூறுவோம் "நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்". இப்பேரறத்தைப் பிழையாது கடைப்பிடிப்பார் களாக. பல்லாயிரவர்க்கு உதவும் பழ மரத்தின் வேரில் வெந்நீர் ஊற்ற நினைப்பது பாவமாகும். உண்மையான கல்வி நோக்கத்திற்காகவே தாம் ஈட்டிய பொருளை வழங்கிய ஒரு நல்ல இதயத்திற்கு மாறுபாடான முயற்சிகள் எவையும் மக்களால் கண்டிக்கபடவேண்டியனவாகும். ஐம்பதைக்கடந்த பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்த செட்டிநாட்டரசர் திரு. அண்ணாமலைச்செட்டியார் அவர்களின் நூற்றாண்டுப்பிறந்தநாள் விழாவில், அவர் ஏற்றிவைத்ததீபத்தை அனைவரும் அணையாது பாதுகாக்க வேண்டுமென்று உறுதி ஏற்பதே நன்றியும் — அறமும் ஆகும். அண்ணாமலை அரசர் ஏற்றிவைத்த அறிவு தீபம், அண்ணாமலைதீபப் புகழ்போல் ஓங்கிச் சிறப்பதாக.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்

திருவாமூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜைப்பெருவிழாவில்

வழங்கியருளிய

ஆசியுரை

29—4—1981

" கூற்ருயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நான் அறியேன்
ஏற்ருய்அடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்ருதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே "

ஆசாரியர்களின் பெருமை

சைவசமயாசாரியர் நால்வருள் இரண்டாமவராக வைத்து எண்ணப்பெறுபவர் அப்பர் பெருமான். தேவாரம் அருளிய மூவருள் நடுவணராக வைத்துப் போற்றப்பெறும் சிறப்புடையவர். அவர் அவதரித்த பெருமையைப்பெற்று விளங்குவது சிவம்பெருக்கும் சிறப்புடையதாகிய இத்திருவாமூர். சைவர்களுக்குக் குருவாக விளங்கும் இவர் இறையருளில் நிறைவுற்ற திருநாளே இச்சித்திரைச் சதயத்திருநாள். இந்நன்ஞளில் இக் குருமூர்த்திக்கு குருபூஜைப் பெருவிழா சிறப்புறக் கொண்டாடுகின்ருேம். ஆசாரியர்கள் என்பவர்கள் மனத்தாலும் வாக்காலும் செயலாலும் தூயவர்களாய் இருப்பவர்கள். தூய்மை இல்லாதவர்களை – தூயநெறியை அடையவேண்டும் என்று விரும்புபவர்களைத் தம் வாக்காலும் வாழ்வு நெறியாலும் நன்னெறிக்கு அழைத்துச்செல்லும் சிறப்புடையவர்கள்.

குருபூஜை விழா

நமக்குக் குருவாகஇருக்கும் அத்தகையசிறப்புடையவர்களைப் பூஜித்து வழிபடுகின்ற முறையால் அவர்களின் நினைவுநாளைக்

குருபூஜைத் திருநாளாகக்கொண்டாடிமகிழ்கின்றோம். அப்படிக் கொண்டாடும் பொழுது அவர்கள் வழங்கிய அறவுரைகளை வாழ்ந்துகாட்டிய நெறிமுறைகளை முற்றிலும் பின்பற்ற இயலா விட்டாலும் ஆண்டிற்கு ஒரு சிலவற்றையாவது சிந்தித்தும் அவற்றின்வழி வாழ முயன்றும் நம்முடைய உயர்வுக்கு வழி வகுக்கும் நிலையில் இவ்விழாவைப் பயனுடையதாக்கிக்கொள் ளுதல் சைவமக்களின்-சமய உணர்வுடையமக்களின் தலையாய கடமையாகும். அந்தவகையில் இந்த ஆண்டு அப்பரடிகள் வாழ்ந்துகாட்டிய நெறிமுறைகளில் ஏற்றுப் போற்றிக்கொள்ள வேண்டிய ஒரு சில கருத்துக்களை இங்கே சிந்திப்போம்.

பகைவனுக்கு அருள்வாய்

ஒருவன் பகைமை பாராட்டுகின்றான் என்றால் அது அவன் அறியாமையால் நிகழ்வது. அந்தப் பகைமைக்கு ஆளாகின்றவன் நல்லவனாகவும் அறிவுடையவனாகவும் இருப்பானேயானால் அந்தப்பகைமையைப் பாராட்டியவனிடம் பகைமை கொள்ளமாட்டான்; மாறாக அவனது அறியாமையை நினைந்து இரக்கமே கொள்வான். இந்த உயரிய பண்புள்ளம் நாயன் மார்கள் அனைவரிடத்தும் காணலாம்; சிறப்பாக அப்பர் பெருமானிடத்தில் காண்போம்.

சோதனையில் உய்ந்த சாதனை

திருநாவுக்கரசர் சமணசமயத்திலிருந்தபோது சூலைநோயால் துயருற்றார். அதுதீரப்பெருமையால் திலகவதியாரின்வழிநின்று திருவதிகைவீரட்டானம் சேர்ந்து இறையருளால் தேவாரம் அருளிச்செய்து நோய்நீங்கப்பெற்றார். இந்நிலையை அறிந்த சமணர்கள், தங்கள் தீய அறிவுரைகளால் மகேந்திரவர்மப் பல்லவன்மூலம் அப்பரடிகளுக்குப் பல இன்னல்களை இழைத் தார்கள்.

அவற்றில் ஒன்று; ஒருவாரகாலம் சுண்ணும்புக் காளவாய் எனக்கூறப்பெறும் நீற்றறையில் இடச்செய்தனர். அப்பரடிகள் நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் என்ற உறுதி படைத்தவர் அல்லவா? பெருமானின் அஞ்செழுத்தை நெஞ் சழுத்தி நீற்றறையில்தங்கித் தவமிருந்தார். மாற்றாருக்கு நீற்றறை யாக அது தோன்றினும் ஈசன் எந்தை இணையடி நீழலைப் பிரியாமல் இருந்த அப்பருக்கு மாசில்வீணையும் மாலைமதியமும் வீசுதென்றலுமாகக் குளிர்ந்தது.

மற்றொன்று; நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்பித்தனர். அதனை, "பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்" என்னும் திருவள்ளுவர் வாக்கிற்கு

இணங்க, நஞ்சும் அமுதாம் எங்கள் நாதன் அடியாருக்கு என்று கொண்டு, நஞ்சு என அறிந்தும் உண்டு அமைந்திருந்தார். வஞ்சகரால் நஞ்சருந்தியும் மகேசன் அருளால் மாளாது வாழ்வு பெற்றுய்ந்தார்.

பிறிதொன்று; கல்லில்கட்டிக் கடலில்இட்டனர். கல்துணைப் பூட்டி ஓர் கடலில் பாய்ச்சினும் நற்றுணை யாவது நமச்சிவாயவே என்று உருவேற்றி, கல்லையே தெப்பமாகக்கொண்டு கரை யேறினர்.

கலியுகமும் துவாபரயுகமும்

இம்மூன்று நிகழ்ச்சிகளும் கலியுகத்தில்நிகழ்ந்தநிகழ்ச்சிகள். இதற்கு முந்தியயுகத்தில் அதாவது துவாபர யுகத்தில் நடந்த வரலாற்று நிகழ்ச்சிகள் சிலவற்றையும் இவற்றுடன் ஒப்பிட்டுக் கண்டு உண்மைதெளியலாம்.

வஞ்சகநெஞ்சம் படைத்த துரியோதனுதியர்கள் நல்லுள்ளம் படைத்த பஞ்சபாண்டவர்கள் மீது கொண்ட பொருமையால் அவர்கள் தங்கியிருந்த அரக்கு மாளிகைக்குத் தீயிட்டனர். கண்ணன் அருளால் பாண்டவர்கள் தப்பிப் பிழைத்தனர். இந்நிகழ்ச்சி நீற்றறையில் இட்ட நிகழ்ச்சியோடு நினைவு கூரத் தக்கதாம்.

அடுத்ததாகப் பொருமையுள்ளம் கொண்ட துரியோதனன், பாண்டவர்களில் ஒருவனுன பீமனுக்கு நஞ்சுகலந்த சோற்றை உணவாக அளித்தான். பீமன் அதை உண்டு சாகாது பிழைத்தான். மேலும் நச்சுப்பாம்பை அவன்மீது விட்டான். அவை எல்லாம் முட்டைப்பூச்சிகளாய் நசுங்கி அழிந்தன. இந்நிகழ்ச்சி திருநாவுக்கரசருக்கு நஞ்சு கலந்தபால்சோறு ஊட்டிய நிகழ்ச்சியோடு ஒப்பிட்டுக் காணத்தக்கதாய் உள்ளது.

பின்னர்பீமனது கைகால்களைக்கயிற்ருல்கட்டிக்கங்கையில் போடச் செய்தான். அதிலும் அவன் இறையருளால் தப்பினுன். ஒருவாரகாலம் நாகலோகம் சென்றுவாசுகி உதவியால்பிழைத்து மீண்டும்வந்தான் என்று பாரதம்கூறுகிறது. இது, அப்பரடிகளைக் கல்லில் பிணைத்துக் கடலில் இட்ட வரலாற்று நிகழ்ச்சியோடு ஒப்பிட்டுக் காணக்கூடியது.

இந்த நிகழ்ச்சியில் ஒரு வேறுபாடு இருப்பதைக் காணலாம். துவாபரயுகத்தில் பகைவனைக் கங்கையில் போட எண்ணிய பொழுது கைகால்களைக் கட்டிப் போட்டார்கள். ஆனுல் கலியுகத்தில் சமணர்கள், அப்பரடிகளைக்கடலில் இடும்பொழுது

கல்லுடன் பிணைத்துக் கடலில் இட்டனர். இது கலியுகக் கடுமையைக் காட்டுவதோடு முன்யுகத்தைக் காட்டிலும் பின் யுகத்தில் தீமைவளர்வதையும் காட்டுகிறது.

விழாவும் விழுமியபயனும்

எனவே பொதுவாகத் துவாபரயுகமானாலும் கலியுகமானாலும் வஞ்சகர்கள், நேர்மையுள்ளவர்களுக்குப் பல இன்னல்கள் விளைவித்து வந்துள்ளனர் என்பது தெளிவாகிறது

வஞ்சனையும் பொறாமையும் கொண்ட துரியோதனாதியர்கள் நல்லுள்ளமும் அன்பும்கொண்டபாண்டவர்களுக்குப் பல்வேறு வகையில் இன்னல்கள் செய்தாலும் அவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டு அவர்கள்மீது பகைமை பாராட்டாது பாண்டவர்கள் சகோதர பாசத்துடன் நடந்துகொண்டார்கள் என்பதைப் பாரதத்தைக்கொண்டு அறியமுடிகிறது. அதேபோல இக்கலியுகத்திலும் சமணர்களின் துர்ப்போதனையினால் மனம் மாறிய பல்லவமன்னன் அப்பரடிகளுக்குச் சொல்லொணாத் துயரங்கள் இழைத்தபோதிலும் பின்னர் அவனே மனம்மாறித் திருந்தித் தம்வழி வந்தபொழுது அவன் செய்த தீங்குகளை மறந்து மன்னித்து அவனைச் சைவசமயத்தில் ஈடுபடுத்தி அவனையும் ஒருபக்தனாக ஏற்றுக் கொண்டார் அப்பர்பெருமான் என்பதை அவரது வரலாறு கூறும் பெரியபுராணம் அறிவிக்கிறது.

எனவே நமக்குப் பகைமை உணர்வுடன் தீங்கு செய்த ஒருவனையும் அத்தீங்கினை எண்ணி அவனை வெறுக்காது அவன் மீது இரக்கம் கொண்டு அவனும் திருந்தி வாழ ஆவனமேற் கொள்ளவேண்டும் என்பதை இவ்விருதிறத்து நிகழ்ச்சிகளும் எடுத்துக்காட்டி நம்மை வழிப்படுத்துகின்றன.

பகைவனுக்கு அருளும் பாங்காகிய இப்பண்பையே இவ் வாண்டின் குருபூஜைவிழாச் சிந்தனையாக எண்ணி ஏற்றுப் போற்றி அனைவரும் வாழ்வோமாக.

அப்பர் பெருமானின் குருபூஜைப் பெருவிழாவினை அவர் அவதரித்த இத்திருவாமூரில் திருப்பணிச்செல்வர் திரு. வாகீசம் பிள்ளை திரு. திருநாவுக்கரசுபிள்ளை உள்ளூர், வெளியூர் அன்பர் கள் முதலியோர் ஆண்டுதோறும் குருபூஜைவிழாக் கமிட்டியின் சார்பில் மிகச் சிறப்பாக நடத்திவருவது மகிழ்ச்சிக்குரியது; பாராட்டுதற்குரியது. விழாவில் பங்குகொள்ளும் அன்பர்கள் பலரும் எல்லா நலன்களும் பெற்று நீடுவாழச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

உ
சிவமயம்

பொங்குக! பொங்குக!

இரா. செல்வக்கணபதி. எம். ஏ.,

பொங்குக! பொங்குகவே! பால்
பொங்குக! பொங்குகவே!

1 புன்மை அகன்றிட நன்மை விளைந்திட
இன்மை ஒழிந்திட யாவும் சிறந்திட (பொங்)

2 மஞ்சள் விளைந்திட இஞ்சி சிறந்திட
பஞ்சம் பறந்திடப் பண்பு மலர்ந்திட (பொங்)

3 செந்நெல் குவிந்திடச் சிந்தை மலர்ந்திட
பந்தம் குறைந்திடப் பாசம் வளர்ந்திட (பொங்)

4 ஐயன் அருள்மிக வையம் நிலைபெறத்
தையலர் வாழ்வு தளிர்த்துச் சிறந்திட (பொங்)

5 மாடு நலம்பெற வீடு உயர்ந்திட
காடு கழனிகள் கன்னல் விளைந்திடப் (பொங்)

6 புத்தம் புதுக்கலை நித்தம் நிலைபெற
முத்தமிழ் எங்கணும் முன்னிச் சிறந்திடச் (பொங்)

7 சைவம் நிலைபெற வையம் வளம்பெற
மையல் அகன்றொரு மாட்சி சிறந்திட (பொங்)

8 உண்மை வளர்ந்திட உய்வு பிறந்திட
எண்ண மலர்களின் இன்பம் கனிந்திட (பொங்)

9 ஞாலம் தழைத்திட நற்றமிழ் வாழ்ந்திட
காலங் கடந்துநம் கருத்துச் சிறந்திடத் (பொங்)

10 துன்பம் பொடிபட இன்பம் நிறைந்திட
நன்மை உலகினில் நாளும் வளர்ந்திடப் (பொங்)

அருமைத்திருநாள் அந்தாதி

அரங்க. திரு. முத்துமணி

மாவட்டப்பதிவாளர், (தணிக்கை) தஞ்சாவூர்

(வெண்பா)

இனிய திருத்தருமை யாதீனம் செய்யும்
புனிதச் செயல்யாவும் போற்றிக் — கனிவார்ந்த
சண்முகப்பேர் மாமணிதன் தாளை வணங்குகிறேன்
உண்மையில் உள்ளம் உவந்து !

உவகைக் கடல்மீதில் உள்ளங்கள் நீந்தச்
சிவனருளே காரணமாம்; சேரும் — பவமகற்றி
வையத்தில் என்றுமே வாகீசர் தம்பணிபோல்
செய்தலே தொண்டின் சிறப்பு.

சிறப்பான நன்னாள்; நம் சீர்மிகுந்த பொங்கல்
அறநெறிக்கே வித்தாம்; அழகுத் — திறங்காட்டும்!
முற்றத்தில் பொங்கல்; முழுநீளச் செங்கரும்பு!
சுற்றமுடன் காண்பார் சுகம்!

சுகத்திலே மூழ்கிடாமல் சொல்லுமோர் அன்பு
தகவுடன் நின்று தழைக்கப் — புகலிடன்
ஆலயங்க ளாகும்; அருமைத் திருமுறைகள்
காலமெல்லாம் நல்கும் களிப்பு!

களிப்பினை நல்கும் கரும்பே இறைவன்
அளிக்கும் விருந்தாகும்; ஆன்ற — துளித் தேனை
எண்ணி மயங்காமல் இப்பொங்கல் நன்னாளில்
கண்ணுதலை நாம்தொழுவோம் காண்!

இந்து மதத்தை வாழவிடுங்கள்...

திரு. மணியன்

மங்களகரமான சுமங்கலி அவள்,

பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்பவள் .... ஆல மரமாய் – ஆகிவந்த பெருமையோடு, உலகம் முழுவதற்கும் அவள் உபகாரியாகத் திகழ்ந்துவருகிறாள். உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் அவள் பெருமை தெரியும்.

ஆனால், ஒரு விசித்திரம்.

அவளுடைய பெருமையில், அவளுடைய பிள்ளைகளுக்கு மட்டும் சந்தேகம் – அவநம்பிக்கை!

ஆனால், அதைப்பற்றி அவள் கவலைப்படவில்லை. கருணை மயமாய்த் தன் கருமமே கண்ணாக இருந்தாள்.

திடீரென்று அவள் பிள்ளைகளுக்கு ஒரு வேகம்... அவளை வாழவிடாமல் அழித்துவிடவேண்டும் என்று; அவளைச் செய லற்றவளாய் ஒடுக்கிவிடவேண்டும் என்று.

அந்தப் பிள்ளைகளின் செயலைப்பார்த்து, 'என்னஅக்கிரமம்' என்று குமுறுகிறீர்களா...?

'அந்த மங்கலநாயகிக்கு ஏன் இந்தச் சோதனை?' என்று பொருமுகிறீர்களா...?

அந்தக் குமுறல் – பொருமல் எல்லாவற்றையும் கொஞ்சம் அடக்குங்கள்.

அந்தப் 'பிள்ளைகள்' வேறுயாருமல்ல; நாமேதான்!

'நாம்' என்றால்... அந்தத்தாயின் பெருமை அறியாதநாம் – நம் சமூகம் – நாம் தேர்ந்தெடுத்திருக்கும் அரசப் பிரதிநிதிகள் எல்லாருமேதான்.

அந்தத் தாய்தான் நம் 'இந்து மதம்!'.

ஃ ஃ ஃ ஃ

மனிதனுக்கு இரண்டு தேவை.

ஒன்று உலகியல் - லௌகீகத் தேவைகள். இது சரீரவளர்ச்சிக்கு. அடுத்தது ஆன்மிகம்; இது மன அமைதிக்கும் நற்பண்புகளுக்கும்.

உலகியல் தேவைகளைப் பரிபாலிப்பது அரசு; ஆட்சி.

ஆன்மிகத் தேவைகளைப் பரிபாலிப்பது, மதம். தன் சார்பில் மத ஆச்சாரியர்கள், மற்றும் ஆலயங்கள் - அறநிலையங்கள் - தம்தம் போக்கில் ஆன்மிகப் பணியாற்றும் பொறுப்பிலுள்ளவர்கள்.

இதுகாறும் -

இந்த இருபெரும் துறைகளும் தனித்தனியே இயங்கினலும் ஒன்றுக்கொன்று அனுசரணையாக இருந்துவந்தன.

அரசர்களுக்கு அருளாளர்கள் குருவாக இருந்து வழிகாட்டினர்.

அறநிலையங்களுக்கு உடைமை அளிப்பது - அவற்றைக் காப்பது இவை ஆட்சியாளர்களின் கடமையாக இருந்தது. அந்தப் பொருட்களைக்கொண்டு ஆன்மிகநெறியைப் பரப்பிக் கொண்டிருந்தனர் அருளாளர்களும், அறநிலையங்களும். அதனுல் சமுகவாழ்வும் மேம்பட்டிருந்தது.

இப்போது...?

ஆன்மிகத் துறையின் வேரில் வெந்நீரைக் கொட்டிக் கொண்டிருக்கிறோம் நாம். அதாவது இந்து மதத்தின் வேரில் மாத்திரம்! ஆம்; நம்மால் அழிக்கப்படவேண்டும் என்று நாம் குறிவைத்திருப்பது இந்து மதத்தை மட்டும்தானே! மற்றவற்றை நெருங்கமுடியுமா என்ன...?

ஃ ஃ ஃ ஃ

முதலில்நாம்சிதைக்கமுயன்றிருப்பது அதன் வருமானத்தை! ஆலய நிர்வாகம் - ஆன்மிகப் பிரசாரப்பணி - அறப்பணிகள் இவற்றை மத நிறுவனங்கள் நிறைவேற்ற ஒரு கருவியாகப் பயன்பட வேண்டியவை அதன் சொத்துக்கள்தாம்.

மற்ற மத நிறுவனங்களின் உடைமைகள் பெரும்பாலும் பணமாக இருக்கின்றன.

ஆனால், இந்துமத அறநிலையங்களின் - மடங்களின் - ஆலயங்களின் சொத்துக்களோ, பெரும்பாலும் நிலங்களாகவே இருக்கின்றன.

அந்த நிலங்கள் குத்தகைதாரர்களின் பொறுப்பில் இருக்கின்றன.

அரசாங்க சட்டத் திட்டங்களின் காரணமாக இப்போது குத்தகைதாரர்களிடமிருந்து சரியாகக் குத்தகைப்பணம் வருவதில்லை. அதன் விளைவாகப் பண்டைய காலத்தில் நிறைவேற்றப் பட்டுவந்த பல அறப்பணிகள் நிறுத்தப்பட்டுவிட்டன... நிலத்தைமட்டுமே நம்பியிருந்த பல அறநிலையங்கள் செயலற்றுப் போயிருக்கின்றன. பக்தர்கள்காணிக்கையாகப்போடும் பணத்தில்தான் ஆலயங்களில் விளக்குகள் எரிகின்றன. சீடர்கள் அளிக்கும் பாதகாணிக்கையில்தான் மடங்கள் நிர்வகிக்கப் பட்டு வருகின்றன.

அன்றாட நிர்வாகத்துக்கே சிரமதசையில் இருக்கும் அறநிலையங்கள் அற ஆன்மிகப் பணியில் எந்தப் பொருட் சக்தியைக் கொண்டு ஈடுபடமுடியும்? 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்ற வள்ளுவரின் வாக்கு, அறநிலையங்களின் உலகியல் பணியில் மாத்திரம் எப்படிப் பொய்க்கமுடியும்?

மற்ற மதங்களுக்கு வெளிநாடுகளிலிருந்தெல்லாம் பண உதவி வருவது உலகறிந்த உண்மை.

ஆனால், இந்தஇந்து மத அறநிலையங்களுக்குப் பண்டைய மன்னர்களும், மக்களும் கொடுத்த செல்வத்திலிருந்து நியாயமான நிதியைப் பெறக்கூட அரசும் - சமூகத்தின் மனசாட்சியும் உதவவில்லை. உதவத் தயாராக இல்லை.

காரணம், குத்தகைதாரர்களைப் பகைத்துக்கொண்டு அரசியல் நடத்த முடியாது. அதன்காரணமாக அறநிலையங்கள் முதுகில் குத்தப்படுகின்றன.

ஃ ஃ ஃ ஃ

இன்னொரு வேடிக்கை...

அரசாங்க இலாகாக்களில் உபரிப்பணம் இருந்தால் அந்தந்த இலாகாகளின்வளர்ச்சிக்குத்தான் செலவிடுவார்கள்... தபால் இலாகவில் உபரிப்பணம் இருந்தால், சில தபால் நிலையங்கள் திறக்கவும், அல்லது தபால் நிலையங்களின் சீரமைப்புப் பணிக்காகவும் செலவிடுவார்கள்.

இரயில்வேஇலாகாவில் உபரியாகப்பணமிருந்தால் அதிகப் படியாக ரயில் பாதைகள் போடுவது மற்றும் அந்த இலாகாவை விஸ்தரிப்பது போன்ற பணிகளைச் செய்யப்பயன்படுத்து வார்கள்.

தபால் இலாகா உபரிப் பணத்தை வைத்து இரயில்வே விஸ்தரிப்புக்குப் பயன்படுத்துவார்களா ?

ஆனால், அறநிலையங்கள் விஷயம் என்றால், இப்படிப்பட்ட வேடிக்கைகளை நம் இந்தியாவிலுள்ள அரசாங்கங்கள் சட்டத் துணையுடன் செய்வதுண்டு.

கல்விநிறுவனங்களை மேம்படுத்த கல்விஇலாகாஇருக்கிறது. மருத்துவ நிலையங்களை மேம்படுத்த மருத்துவ இலாகா இருக் கிறது. ஆனால் – அறநிலையங்களை மேம்படுத்த மட்டுமே பயன் பட வேண்டிய அறநிலையங்களின் உபரிப் பணத்தை மாத்திரம் பல்வேறு விஷயங்களுக்கும் பயன்படுத்தச் சொல்வது என்ன தர்மம் ?

கல்விச் சாலைகள் – மருத்துவநிலையங்கள் எவ்வளவு தேவையோ, அந்த அளவு மக்களுக்கு அமைதியை அளிக்கும் ஆன்மிகப்பணியை நிறைவேற்றும் ஆலயங்களும் மதநிறுவனங் களும் தேவை. எந்தெந்த நோக்கத்துக்காகப் பயன்பட வேண்டும் என்று மக்களும் – மன்னர்களும் சொத்துக்களை அளித்தார்களோ, அந்தந்த நோக்கத்துக்கு அந்தந்தச் சொத் துக்களைப் பயன்படுத்துவதுதான் ‘ அறம் ’

சட்டமே துணை நின்று மாற்று நோக்கத்துக்குப் பயன் படுத்தினாலும்கூட, அது அந்தச் சொத்தை அளித்தவர்களின் நோக்கத்துக்குத் துரோகமாகச் செயல்படும் ‘ மறம் ’

இன்னும் ஒரு விசித்திரம்.

இந்த நாட்டில் ‘செக்யூலரிசம்’ – அதாவது மதச்சார்பின்மை என்கிறார்களே, அதற்குப் பொருள் என்ன தெரியுமா ?

மற்ற அனைத்து மதங்களுக்கும் போதிய பாதுகாப்பு அளித்துவிட்டு இந்து மதத்தை மாத்திரம் ஒடுக்குவது.

ஆம் : இந்துக்கள் பெருவாரியாக இருக்கும் இந்த நாட்டில் பாதுகாப்பே இல்லாமலிருக்கும் ஒரே மதம், இந்து மதம்தான் !

பல சமூகக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் இந்து மதத்தின் பேரில் பாயும். ஆனால், அவை மற்ற மதங்களின் பக்கம் பார்வையைக்கூட செலுத்தாது.

கொலைக்குற்றம் சாட்டப்பட்ட ஒருவன் சீக்கியர்களின் தங்கக் கோயிலுக்குள் தங்கியிருந்தால், உள்ளே நுழைந்து அவனைக்கைது செய்ய அரசாங்கத்தால் முடியாது. காரணம், சீக்கியர்களின் மத உணர்வுகளையும் மத ஆசாரங்களையும் தொடக்கூட அவ்வளவு பயம் அரசாங்கத்துக்கு.

ஆனால், இந்துமதத்தில் தன் ஆன்மிகப் பணிகளைத் தொடர்ந்து செய்ய ஒரு மடாதிபதி தனக்கொரு வாரிசை நியமித்தால், ஆன்மிகத்துக்குக் கொஞ்சமும் சம்பந்தமில்லாத அரசாங்கமும் அதிகாரிகளும் தலையிடுவார்களாம்!

மைனாரிட்டி மதத்தினருக்குப்பாதுகாப்பு அளிப்பதுஎன்றால், மைனாரிட்டி மதத்தினருக்கு இருக்கும் உரிமைகூட மெஜாரிட்டி மதத்தினருக்குக் கொடுக்காமல், மெஜாரிட்டி மதத்தைச் சிதைப்பது என்று அர்த்தமா ?

பலதாரமணச்சட்டம் பெண்மைக்குப்பாதுகாப்பு அளிக்கும் உயர்ந்த சட்டம்தான். ஆனால், அதை இந்துக்களுக்கு மட்டுமே பிரயோகிப்பதால் இந்து சமுதாயமே எண்ணிக்கையில் சுருங்கி வருவதை எத்தனைபேர் உணர்ந்திருக்கிறார்கள். மற்றமதத்தினர் கள் விஷயத்தில் நான்கு பெண்கள்வரைத் திருமணம் செய்து கொள்வதால் அந்தமதச் சார்புடைய மக்கள் பெருகிக்கொண்டு வருகிறார்கள். இந்துக்கள் எண்ணிக்கையில் சுருங்கி வருகிறார் கள். காலப்போக்கில் என்ன ஆகும் என்று புரிகிறதா? இன்று மெஜாரிட்டியாக இருக்கும் இந்துக்களை மைனாரிட்டியாக்குவதற் காகவே பலதார மணத்தடைச்சட்டம் இந்துக்களுக்கு மட்டுமே பொருந்தும்படி செய்திருக்கிறார்களா ? மற்ற மதத்தினருக்கு அளிக்கப்படும் சலுகைகளை, உரிமைகளை இந்துமதத்தினருக்குக் கொடுக்காமல் இருப்பது என்ன தர்மம் ?

பாகிஸ்தான் போன்ற நாடுகளில் சீக்கியர்கள், இந்துக்கள் கிறிஸ்துவர்கள் எல்லாரும் வாழ்ந்தாலும் இஸ்லாமியர்கள் அதிகமாக இருப்பதாலேயே அதை இஸ்லாமிய நாடு என்று அறிவித்திருக்கிறார்கள்.

அதேபோல் அராபிய தேசங்களில் இஸ்லாமிய மத அரசு நிகழ்கிறது.

'அப்படியிருக்க இந்துக்கள் பெருவாரியாக வாழும் இந்தியாவை ஏன் 'இந்து ராஜ்யம்' என்று பிரகடனப்படுத்தக் கூடாது ?

இஸ்லாமிய நாடுகளில் மற்ற மதத்தினருக்குப் பாதுகாப்பு இருப்பதுபோல், நம் இந்து நாட்டிலும், மற்ற மதத்தினர்களுக்கு உரிய பாதுகாப்பு இருக்குமே! அதுவும் நம் இந்துமதம் காட்டும் சமரச நெறி இன்னும் இனிய சகோதரத்துவத்தை அனைத்து மத மக்கள் மத்தியிலும் உருவாக்குமே!' என்று கேட்கும் உணர்வு நாட்டில் எழுந்து வருகிறது.

'ஆன்மீக உணர்வும் அற உணர்வும் இல்லாத அரசியல் வாதிகள் ஆளும் நாட்டில் இருப்பதைவிட, ஆன்மீக ஒழுக்கத்தைப் போதிக்கும் நெறியைக் கொண்டதாக அமையக் கூடிய 'இந்து ராஜ்யத்' தின் ஆட்சி இன்னும் உன்னதமாகச் செயல்படாதா ?' என்று இந்துக்கள் கேட்கும் நிலைமையை அரசும் அரசியல்வாதிகளும் உருவாக்கிக் கொண்டிருக்க வில்லையா ?

இவையெல்லாம் விதண்டாவாதக் கேள்விகள் அல்ல. வேதனையுற்ற ஓர் இந்துமதத் தொண்டனின் விண்ணப்பங்கள்...

அவன், இந்த பாரதத் திருநாட்டை 'ஞானபூமி' யாக மாற்றிய இந்துக் கலாசாரமும், இந்து மதமும் அழிந்து விடக் கூடாதே என்ற ஆதங்கத்தில் கேட்கிறான்.

அவன் இந்த இந்து மதத்தின் ஞானமணத்தை இந்த நாட்டு மக்கள் அனைவரும் நுகர்ந்து மகிழவேண்டும் என்ற தவிப்பில் கேட்கிறான்.

இவன் கேள்வி இந்த பாரத சமுதாயத்தைத் தொட்டு எழுப்புமா ... ? அரசியல் வாரிசுகளின் மனச்சாட்சியை உலுக்குமா ? அறநெறி நிற்கும் இந்துக்கள் ஒவ்வொருவருக்கும் விழிப்புணர்ச்சியை உண்டாக்குமா?

தெரிந்துகொள்ளக் காத்திருப்போம் ......

நன்றி.

— ஞானபூமி, ஜனவரி 1982.

சித்தர்களின் சமுதாய நோக்கு

புலவர். திரு. மு. வைத்தியநாதன்

திருச்சிராப்பள்ளி.

சித்தர்கள் யார் ?

சித்தத்தில் சிவனுண்மை தெளிந்தவர்கள் சித்தர்கள். அவர்கள் யோகநெறியில் கடவுளைக்கண்டு, இருவினையொப்பு நிகழுங்காலம் வரையில், உலகில் உடலோடு உலவியவர்கள்.

உயிர் போலாதல், மகத்துவமாதல், நிறைந்த சுமையாதல். தக்கை போலாதல், விரும்பியதையடைதல், பிறர் உடம்பிற் புகுதல், நினைத்தவரிடம் அக்கணமே தோன்றல், ஐந்தொழில் நடத்தல், யாவரையும் தன் வயப்படுத்தல் முதலிய அட்ட சித்திகளில் வல்லவர்கள் சித்தர்கள்.

நந்தி, அகத்தியர், திருமூலர், புண்ணாக்கீசர், புலஸ்தியர், பூனைக்கண்ணர், இடைக்காடர், போகர், புலிக்கையீசர். கருவூரார், கொங்கணவர், காலாங்கி, அழுகணி, அகப்பையர், பாம்பாட்டி, தேரையர், குதம்பை, சட்டைநாதர், பட்டினத்தார், சிவவாக்கியர், தாயுமானவர், இராமலிங்கர் போன்றவர்கள் சித்தர் பரம்பரையினர்.

இவர்களில் கொங்கணர், அகத்தியர், திருமூலர், போகர் போன்றோர், மருத்துவம் முதலிய பல கலைகளில் வல்லவர்கள். பாம்பாட்டி, பட்டினத்தார் போன்றவர்கள் பெண்களை இழித்துப் பாடியுள்ளனர். சிலர் உருவ வழிபாடு, சிறு தெய்வ வழிபாடு போன்றவைகளைச் சாடியுள்ளனர்.

இலக்கியப் புலமை :

சித்தர்கள் அனைவரும் நல்ல மொழிப் புலமை உடையவர்கள். அவர்கள் பாடல்களில் எளிமையையும் காணலாம். கடுமையையும் காணலாம்.

கவிபாடுவதே கடினம். அதிலும் சந்தக்கட்டுக் கோப்பிலிருந்து பாடுவது அதனினும் கடினம். சித்தர்களிடம் எதுகையும் மோனையும் ஏவல் கேட்டுள்ளன; சதிராடியுள்ளன.

மிக எளியோரும் பொருள் அறிந்து மகிழும் வண்ணம் காணப்படும் பாடல்கள், மிகவுயர்ந்த விற்பன்னர்களாலும் பொருளறிய வாராப் பாடல்கள் என எளிமை, கடுமைநிலைப் பாடல்கள் அவர்கள் நூல்களில் காணப்படுகின்றன.

தெளிவான தமிழ்நடையில், தம் சிந்தனை ஓட்டத்தில் கிடைத்த அருங்கருத்துக்களைப் பாடலாகப் பாடி மகிழ்ந் துள்ளனர். வெண்பா முதலிய பாக்களும், விருத்தம், தாழிசை போன்ற பாவினங்களும், கண்ணி, காவடிச் சிந்துகளும் எத்துணைச் சிறப்பாக அவர்கள் நாவில் நடம்பயின்றுள்ளன. மருந்துப் பெயர்கள், அவைகளின் செய்முறை, பயன் முதலிய வைகள் குறித்துச் சித்தர்கள் பயன்படுத்தியுள்ள தமிழ்ச் சொற்கள் இலக்கிய நயத்தோடு இருப்பதுடன் தனி மருத்துவ அகராதியாகவும் தொகுக்கத் தக்கன.

அறிவியல் அறிஞர்கள் :

சித்தர்கள் அறிவியல் கருவிகளும் ஆய்வுக் கூடங்களும் இல்லாத காலத்தில், அகத்தில் ஆய்வு செய்து உண்மையுரைத் துள்ளனர்.

ஓர் உலோகத்தைப் பிறிதோர் உலோகமாக மாற்றும் இரசவாத அற்புதங்களை நிகழ்த்தியுள்ளனர். ஒரு பொருளி லிருந்து ஒன்றைப் பிரித்தும், தேவையானவைகளை இணைத்தும், வேறு உருவமாக மாற்றியும் காட்டும் வல்லமையுடையோராய் வாழ்ந்துள்ளனர்.

பொருட்களில் ஏற்றுக்கொள்ளும் தன்மையுடையவை ஏற்காத தன்மையுடையவை, நிலையாகத் தனித்தன்மையோடு இருப்பவை போன்றவைகளை அறிந்த நுட்பமான அறிவினர்.

சில நோய்களைக் கருவிகளைப் பயன்படுத்தி அறுத்தும் சுட்டும் குணப்படுத்தும் அருங்கலை அறிந்தவர்கள். புற்று, புரையோடிய புண், நஞ்சுதீண்டல் போன்றவைகளைக் கீறல், இரத்தம் வாங்குதல், சலாகை போடுதல், மருந்துப் பசைக் கட்டு ஆகிய மருத்துவ முறைகளில் நீக்கிக் காட்டிய ஆற்றலர்கள்.

உடற்பிணி நீக்குதல் :

சித்தர்கள் மனித உடம்பியல் பற்றி மிகவும் தெளிவாக அறிந்தவர்கள். உடம்பைப் போற்றுவதிலும், உடம்பிற்கு வரும் நோய்களை இயற்கை மருந்துகளால் நீக்குவதிலும் நுட்பமான அறிவுடையவர்கள்.

மனிதனின் உடல்நிலையை அறிந்துகொள்ள உதவியாக அமைவன வாத, பித்த, சிலேட்டும நாடிகள் என்றும், இந்நாடிகள் அவைகளுக்குரிய எல்லையில் இயங்காவிடின் உடல்நிலை சீர் கெடும் என்றும் அறிந்தவர்கள். உடல் நாடிகள்வழி, உடல் நிலையினை அறிந்து, நோய் வருமுன்

காப்பது, வந்தபின் நீக்குதல், வரக்கூடும் என்ற அறிகுறி காணப்படுமாயின், தேவையினை நிறைவு செய்தல் போன்ற வகைகளில் உடற்பிணி நீக்க உதவியவர்கள்.

இயற்கையில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டே இரசம், கந்தகம், விடம் என்ற வகைகளில் மருந்துகளைத் தேர்ந்து அளித்தவர்கள். உலர் பொருட்களும், மூலிகைகளும், உப்பு, உலோகம் முதலியனவும் அவர்களின் மருந்துமூலங்கள்.

உளப்பிணி போக்குதல் :

நோய்களில் கொடியது மனநோய். பல நோய்களுக்குத் தாய் அதுவேயாகும். அளவிறந்த காமமும், களியாட்டங் களும் மனநோயில் முடியும்.

சித்தர்கள் மனநோய் தீர்க்கும் மாமருந்து கண்டவர்கள். நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய்நாடி அறிந்தவர்கள். உலகியல் ஆசைத் தொடர்புகளிலிருந்து மன விடுதலைக்கு வழி கூறியவர்கள்.

ஆசை, அழுக்காறு, சினம் காரணமாக மனம் படும் வேதனைகளிலிருந்து, அதை மீட்டு, யோக நெறியிலும், ஞான நெறியிலும் செலுத்த அடிப்படை அமைத்துக் கொடுத் தவர்கள்.

அச்சம் காரணமாகவும், அதிர்ச்சி காரணமாகவும் மனநிலை பிறழ்ந்தவர்களை மீட்டு, மீண்டும் நல்வாழ்வில் நெறிப் படுத்தும் அறிவுக் கூறுபாடுடையவர்கள்.

உடற்பிணி, பிறவிப்பிணி போன்றவைகளிலிருந்து உயிர் விடுபட்டு, அதுநிலை பேறுடைய இன்பம் அடையும் வழியினைத் தெளிந்து கூறியவர்கள்.

ஆன்மவியல் வழிகாட்டிகள் :

ஒரு மனிதன் முதலில் தன்னை அறிதல் வேண்டும். தன் உயிரை அறிதல் வேண்டும். தன் உயிர் மரணமிலாப் பெரு வாழ்வு பெறும் நிலைக்குத் தன்னைத் தகுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். உடற்பிணிநீக்கி,உடலைப்பேணிக்காக்க மருந்துகள் உதவும். அம்மருந்துகள் உயிருக்கு உதவமாட்டா. உயிருக்கு உதவக்கூடியது இறைத்தன்மையே. உயிர் இறைவனை அடைய உதவுவது ஆன்மவியலே.

சித்தர்கள், மனிதனின் மனப்பிணிகளை நீக்கி, யோக நெறி வழியாகவும், ஞான நெறி வழியாகவும் அவன் பெருவாழ்வு பெற உதவியர்கள்.

உடலினைக் கட்டுப்படுத்தி, நாடிகளைத் தூய்மைப்படுத்தி நல்லொழுங்கு முறைகளை மேற்கொண்டால் கடவுளைக் காணலாம் என்று கூறியவர்கள்.

மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரத் தானங்களில் ஆன்மாவைத் தங்கச் செய்து, அவைகளிலிருந்து எழும் குண்டலினி ஆற்றலால் அனைத்து நன்மைகளையும் அடைய லாம் என்று கூறியவர்கள்.

சமுதாயக் கொடுமை எதிர்ப்பு :

சித்தர்கள் ஆன்ம விடுதலையே விரும்பி நின்றாலும், உடலில் உயிர் உள்ளவரை உலகியல் துன்பங்களிலிருந்து அதைக் காக்க வேண்டுமாதலின், சமுதாயத் தீமைகளிலிருந்து காத்துக்கொள்ளும் வழிகளைக் கூறியுள்ளனர்.

சமுதாயக் கொடுமைகளில் தலைமை வகிப்பது வறுமை. உடலுழைப்பும், உள்ள உழைப்புமே வறுமை நீக்கத்திற்குத் துணைபுரியும் என்பது சித்தர்கள் நம்பிக்கை.

சமுதாயத்தில் சாதிக் கொடுமை ஒரு தொடர் நோய். மக்கள் கூட்டத்திலிருந்து மனிதனைப் பிரிக்க சிலர் செய்த சதியே, கால் பெற்றுச் சாதியாகியது. இந்தச் சாதிக் கொடுமை, சமுதாய நல்வாழ்விலிருந்து மனிதனைப் பிரித்துவிடக் கூடியது.

சித்தர்கள், சாதி முறையிலிருந்து மனிதன் விடுபட வேண்டும் என்றும், அவன் எவ்வுயிர்க்கும் இரக்கும் இயல் புடையவனாக இருக்கவேண்டும் என்றும் கூறியுள்ளனர். “நால் வருணம், ஆச்சிரமம், ஆசாரம் முதலாம், நவின்ற கலைச்சரிதமெலாம் பிள்ளை விளையாட்டே ” என்று கூறி மனித குலத்தை ஒன்றாகக் கண்டனர்.

பெண்ணடிமை பண்டிருந்த பெருங்கொடுமை. பெண் பிறப்பே பாவமாகக் கருதப்பட்ட காலத்தில் சித்தர்கள், பெண் மக்கள் உணர்வுகட்கு மதிப்பளிக்க வேண்டினர். ஆண் மக்களின் ஆதிக்க எல்லையிலிருந்து பெண்கள் விடுபட வழி கூறினர்.

தனிமனிதனின் உயர்விற்கு உதவவேண்டிய சமயம், சிலர்க்கு உதவுநிலை அடைந்தமை கண்டு, அதனை எதிர்த்து, பொருந்தா வழிபாடு, போலிவேடம் போன்றவைகளைக் கண்டித்தவர்கள் சித்தர்கள்.

கொடும்பசி, நெடும்பிணி, தளர்முப்பு போன்றவைகளை வென்று, அவைகளை நீக்க உயிரிரக்கம் காரணமாகச் சித்த மருத்துவ முறை கண்டவர்கள். அம்முறையினைக் குரு மாணுக்கர் பரம்பரையாக வளர்த்தவர்கள்.

முடிவுரை :

எனவே தவயோகிகளாகிய தமிழகத்துச் சித்தர்கள், மக்களின் உடல்நோய்களை இரசவாதம், மருத்துவம் வழியாக நீக்கி அதன்வழி அறிவியல் வளர்ச்சிக்கும், உளநோய்களை யோகநிலை, ஞானநிலை வழியாகப் போக்கி அதன்வழி ஆன்ம வியல் வளர்ச்சிக்கும் உதவியர்வகள் என்பதையுணரலாம். மேலும், சமுதாய சீர்திருத்தச் சிந்தனைகளின் முன்னேடிகளும் சித்தர்களேயாவர் என்பதையறிந்து அவர்தம்நெறி போற்று வோமாக !

பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேஸ்வரசுவாமி தேவஸ்தானம்

முரளிரவளி கலைக்கூட விழாவில் கலந்துக்கொள்ளவந்த போது திருப்பனந்தாள் ஸ்ரீ செஞ்சடையப்பர் திருக்கோயிலைக் கண்ணுறும் நல்வாய்ப்பினைப்பெற்றேன். கோயில்முழுவதையும் தூய்மையாகவும், துப்புரவாகவும் நன்கு பராமரித்துவருகின் ருர்கள். தருமபுரம் ஆதீனம் தலைமையில் இக்கோயில் விளங்கு கின்றது என்பதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

(ஒ-ம்) க. இராசாராம்

10—1—1982 தமிழ்நாடு சட்டசபை சபாநாயகர்.

★

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்

இன்று (20—12—1981) இத்தலத்தைத் தரிசிக்கும்பேறு பெற்றேன். ஆலயத்தின்தூய்மை தருமையாதீனத்தின் முத்திரை யைக் காட்டுகிறது. பணியாளர்கள் தூய அன்புடன் பணி செய்கின்றனர். அவர்களுக்கு இறைவன் அருள்பாலிப்பானுக. தருமையாதீனக் குருமகாசந்நிதானத்துக்கு என் பணிவார்ந்த வணக்கம்.

(ஒ-ம்) ம. அ. முருகேசன்,

20—12—1981 மாவட்டநீதிபதி, மதுரை.

நன்றி வாழ்த்து

மு. இரத்தின தேசிகர்,

திருவாரூர்,
7—12—81.

1 தருமைவரு குருமரபு தழைக்கவரு சண்முகதே
சிகஞான சம்பந்த குருவே! நல்ல
இருபதொடு ஆறுக இனிதமரும் குருவாக
இறையருளை இன்றுபொழி எழிலி ஏறே!
அருளுளத்தால் எனைக்கண்டு அடைந்தவர்பால்
[உசாவியறி
அன்புநெறி இன்றுணர்ந்தேன் அண்ணல்! நன்றே
மருளகன்ற உளங்கொண்டேன் மனமாசு ஓடிற்று
மருந்தாக இனியொன்றும் வேண்டேன் ஐயா!

2 காலனை முன்காய்ந்த கறைக்கண்டன் நீற்றினுடன்
சாலவே பிரளயத்தில் தன்னடிக்கீழ் உயிரனைத்தும்
ஓலமிட்டு வந்தடைய உதவுமமு தேசனது
மேலதாம் வெண்பொடியும் விரைந்தணிந்து
[பிணி தவிர்ந்தேன்.

3 அன்னைஅபி ராமியவள் அனைத்துயிர்க்கும் தாயாவாள்
மன்னுமொரு பரசிவத்தின் வாமபாகம் கொண்டாள்
என்னையுமாட் கொண்டருளும் இறைவியின் குங்குமமும்
என்னுயிரின் மாசகல அணிந்தின்று வாழ்வுற்றேன்.

4 பவவினையை அறுக்கின்ற பசுபதிதன் திருச்சாந்து
அவவாழ்வைப் போக்கியருள் அவன் தந்த விபூதி
சிவமெனவே யாம்போற்றும் செல்வமுத்துக் குமரனவன்
தவவாழ்வைத் தருகின்ற திருநீறும் சந்தனமும்.

5 கூடலமர் அழகனவன் கொடையனவே இலைநீறும்
தேடரிய முதற்குரவன் திருநீறும், பெற்றுயர்ந்தேன்
ஏடடங்கா நின்புகழை எவ்வண்ணம் வரைந்திடுவேன்
நாடறியா நற்சாந்தி நிலைக்கண்டேன் வாழியவே.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் பொன்னுர் திருவடிகளை நமஸ்கரித்து அடியேன் விடுக்கும் விண்ணப்பம்.

ஆதீனப் பராமரிப்பில் உள்ள ஆலயங்கள் பல தற்பொழுது உள்ள பொருளாதார நெருக்கடியிலும் முடிந்தவரை செவ்வனே பரிபாலிக்கப்பெறுகிறது என்பது சைவ உலகம் அறிந்த உண்மை. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் சமயப் பற்றையும் சைவத்தொண்டினையும் ஆஸ்தீகஉலகம் உளமார மனமாரப் போற்றுகிறது.

மாதந்திர திருநக்ஷத்திரம் (ஆயில்யம்) தோறும் தேவாரப் பாடல்பெற்ற திருத்தலங்கள் பலவற்றுள் வழிபாடுகள் நடந்து வருகிறது பற்றி இந்தப்பித்தனுக்குத் தெரியவந்தது. ஆகவே சில விண்ணப்பங்களை எங்கே சமர்பித்தால் பித்தம்தெளியும் என்று ஆராய்ந்தபொழுது தருமையாதீனம் 26வது குருமகாசந்நிதானம் தற்பொழுதுள்ள நன்மருந்து என்று புல்லறிவுக்கு எட்டியது. *

ஓர் சைவ அன்பன்

7—12—81.

★

தங்கள் "ஞானசம்பந்தம்" மாதப்பத்திரிகையில் வரும் விஷயங்கள் அறிவுக்குப் பெரிய விருந்தாகவும் – வாழ்க்கைக்கு நல்வழிப்படுத்தும் தூண்டுகோலாகவும் அறிவுரையாகவும் இருக்கிறது. மேலும் – நமது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அருளி வரும் ஆசி உரைகள் நிரம்பவும் சிறந்த – ஆழ்ந்த கருத்துடையவைகளாக இருக்கின்றன.

அன்னை அபிராமி அந்தாதிக்கு விளக்க உரை எழுதுவது நிரம்பச் சிறப்பாக இருக்கிறது. அத்துடன் துதிப்பாடல் நல்ல முறையில் இருக்கிறது. நமது "ஞானசம்பந்தம்" பத்திரிகை இன்னும் சிறப்பாக வெளிவரவேண்டுமென்ற கருத்தில் என் மனதில் பட்டதை தங்களுக்குத் தெரிவித்துள்ளேன்.

R. K. முருகேச நாயுடு.

21—12—81. வடலூர்.

TAMILISAI SEVVALE
P. MANIKAVASAGAM
"SAYEE ILLAM"

24, Varaganery Agraharm
TIRUCHIRAPALLI-620 008.
14—12—81

* 25 ஆண்டுகளாக 'ஞானசம்பந்தம்' மாத இதழைப் படித்து இன்புற்றுவருகிறேன். 41ஆம் ஆண்டு பீடுநடை போட்டு எட்டியதுகுறித்து மட்டிலாமகிழ்ச்சிப் பெருக்கடைகின்றேன். தமிழ்மொழிக்கும், குறிப்பாகச் சைவசமயத்திற்கும் ஆற்றிவரும் பணி மகத்தானது; போற்றுதற்குரியது.

புதுக்கோட்டையில் இந்துசமய மாநாடு நடைபெறுகிறது கோலாகலமாக. அதில், ஆதீனமுதல்வர்கள் பங்குகொண்டுள்ள செய்தியைக்கண்டு மகிழ்ச்சி. சமயத்தைக் காப்பாற்ற, பிறமதம் செல்லாமல் பாதுகாக்கத் தமிழர்கள் எழவேண்டும். நலமே தழைக.

தமிழிசைச் செவ்வேள்
பொ. மாணிக்கவாசகம்

★

நா. அருணசலன்
செயலாளர்.
அருள்நெறித்திருக்கூட்டம்.

கண்டவராயன்பட்டி
24—12—81

மதமாற்றத்தைத் தடைசெய்க; அரசினர்க்கு வேண்டுகோள்

சங்கரன் கோவிலில் இருந்து அரிஜன சகோதரர் ஒருவர் 19—12—81இல் சிறியேனுக்குக் கடிதம்மூலம் தெரிவித்திருப்பது பின்வருமாறு :-

கொடுமைகள் காரணமாக அறியாதநிலையில் வருகிற சூலை 1982க்குள் சாதி ஒழியவில்லை என்றால் பள்ளர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக மதம்மாறிவிட வேண்டும் என்று சபதம் எடுத்துள்ளார்கள்.

அடுத்து மேலும் அக்கடிதத்தில் துருக்கர்களாக்குதற்கு அரபு நாடுகளிலிருந்தும், கிறித்தவர்களாக்குவதற்கு மேலை நாடுகளில் இருந்தும் கோடிக்கணக்கானபணம்வருகிறதென்றும்மதமாற்றத்

திற்கான ஏஜண்டுகள் இருந்து வருகின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இச்செய்தியைப் பார்த்து வருந்துகிறேன். நமது ராஜ்யம் காந்தியடிகள் தந்த ராம ராஜ்யம். இந்த ராஜ்யத்தில் இந்து சமயத்தையழிக்க முற்படுவதைப் பார்க்க யாருக்கும் மனம் விரும்பாது எனவே மதமாற்றம் செய்ய மறைமுகமாக இருந்து நாட்டில்குழப்பங்களை விளைவித்துவருபவர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டுவதும் மதம் மாறுவதைத் தடை செய்ய வேண்டுவதும் இதனைச் சட்டமன்றத்தின் பரிசீலனைக்கு எடுத்து மத மாறுவது சட்டவிரோதம் எனச் சட்டங்கொண்டு வரவேண்டுவதும் அரசின்கடமைஎனத் தமிழக முதல் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மதிப்புரை

புதிய இந்தியாவைப் படைப்போம்

கருத்துக்கள் :- சுவாமி விவேகானந்தர். தமிழாக்கம் :- சுவாமி கமலாத்மானந்தர். வெளியீடு:- ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை - 4. பக்கங்கள் 100. விலை ரூ. 1—00.

இந்திய நாட்டின் தத்துவஞான உணர்வை உலகறியச் செய்தவர் சுவாமி விவேகானந்தர். இந்தியாவை உருவாகக் அவர்தம் உள்ளத்தில் எண்ணிய எண்ணங்கள் அவர்தம் சொற்பொழிவுகளிலும் நூல்களிலும் உள்ளன. அக்கருத்துக்களை ஐந்து தலைப்புக்களில் தொகுத்து இந்நூல் வெளியிடப் பெற்றுள்ளது. சுவாமி வீரேஸ்வரானந்தா அவர்கள் அழகிய அணிந்துரை எழுதியுள்ளார்.

இந்நூல் இந்தியாவின் வீழ்ச்சிக்கான காரணங்களையும், இந்தியாவின் இன்றைய நிலையையும், அதை உணர்த்துவதற்கான வழிகளையும் நமக்குக் கூறுகிறது. வளமான எதிர்கால இந்தியாவை உருவாக்கப் பாடுபடும் இளைஞர்கட்கு இந்நூல் அரிய வழிகாட்டியாக அமையும்.

— வி. சா. கு.

திருப்பரிதிநியமம், திருவெண்ணியூர் தலச்சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருவாசக உரைமணி,

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.

தஞ்சையை அடுத்துள்ள இத்தலங்கள் இரண்டும், சோழ நாட்டுக் காவிரித்தென்கரைத் தலங்களில் 101, 102 ஆகப் போற்றப்பெறுபவை. திருப்பரிதிநியமம் திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் ஒன்றையும் திருவெண்ணியூர் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் அருளிய மூன்று திருப்பதிகங்களையும் பெற்றவை.

1. திருப்பரிதிநியமம்

தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு தாலுக்காவில் தஞ்சை – திருவாரூர் புகைவண்டித்தொடரில் சாலியமங்கலம் நிலையத்துக்குத் தென்மேற்கே 13. கி. மீ. தூரத்தில் உள்ளது இத்தலம். மக்கள் பருத்தியப்பர் கோயில் என இவ்வூரை வழங்குகின்றனர். தஞ்சாவூரிலிருந்துஎண் 9 நகரப்பேருந்து இவ்வூருக்குச் செல்கிறது. இவ்வூர்தியில் செல்வதே எளிமையானது. தஞ்சை – பட்டுக்கோட்டை பேருந்துச்சாலையில் மேலஉளூரில் (உழவூர்) இறங்கி கிழக்கே 2. கி. மீ. நடந்தும் இத்தலத்துக்குச் செல்லலாம். மேலஉளூரிலிருந்து பரிதிநியமம் செல்லும் நுழைவு வழியில் திருக்கோயில் சார்பில் அமைக்கப்பட்ட வளைவும் தலப்பெருமை குறித்த தகவல் பலகையும் உள்ளன. இவ்வூர் கீழ்வேங்கி நாட்டைச் சார்ந்தது எனக் குறிக்கப் பட்டுள்ளது.

பரிதி – சூரியன், நியமம் – கோயில். இத்தலக்கோயில் முற்காலத்தில் சூரியன் கோயிலாக இருந்து பிற்காலத்தில் சிவாலயமாக மாறியதாக இருக்கலாம் என்பர். ஞாயிறு திங்கள் இரண்டையும் பண்டைத்தமிழ்மக்கள் போற்றிவழிப்பட்டனர் என்பதையும், இவற்றின் பெயரால் ஊர்களும் இவற்றுக்குத் தனிக் கோயில்களும் அமைத்து வழிபட்டனர் என்பதையும் சங்கநூல்களிலும் பிற்கால நூல்களிலும் காணலாம். சூரியனர் கோயில், போன்ற ஊர்ப்பெயர்களும், ' ஞாயிறுபோற்றுதும்,'

திங்களைப் போற்றுதும் ' என்பன முதலிய பாடல் தொடர்களும் இதனை மெய்ப்பிக்கும். சிலப்பதிகாரத்தில் பூம்புகார் நகரில் உச்சிக்கிழான் கோட்டம், ஊர்க்கோட்டம் ஆகியன இருந்ததை இளங்கோ அடிகள் கூறுகிறார்.

தலபுராணப்படி சூரியன் வழிபட்டகோயிலாக இது கூறப் படுகிறது. சூரியன் தனக்கு இருந்த குன்மநோய் தீர இத்தலத் திற்கு வந்து தீர்த்தம் உண்டாக்கி அதில் நீராடிச் சிவலிங்கப் பெருமானை வழிபட்டு நோய் நீங்கப்பெற்றான் என்று கூறப் படுகிறது. சிவபெருமான் திருமுன் சூரியன் வழிபடும் நிலையில் திருவுருவம் உள்ளது.

கோயிலமைப்பு :

பேருந்துச் சாலைக்குத் தென்பால் கோயில் உள்ளது. கிழக்கு நோக்கிய சந்நிதி, பழமையான கோயில். கோயிலின் முன்னால் சூரியதீர்த்தமும் பின்னால் சந்திரதீர்த்தமும் உள்ளன. இத்தலம் ஒருகாலத்தில் அரசவனமாக இருந்ததென்பர். கோயிலின் முன்னால் பெரியதேரும், பழமையான ஆலமரமும் உள்ளன. சுவாமிசந்நிதிக்கு முன்னால் விநாயகர் கோயிலும் தென்பால் பிடாரிகோயிலும் கோயிலுக்கு அருகில் இடும்பன் கோயிலும் உள்ளன. ஐந்துநிலைகளுடன் இராஜகோபுரமும் மூன்று நிலைகளுடன் இரண்டாம்கோபுரமும் இரண்டு பிராகாரங் களும் உள்ளன. விதியைச்சேர்த்து மூன்று பிராகாரம். கோபுர வாயிலைக் கடந்தவுடன் விநாயகர் கொடிமரம் நந்திபலிபீடங் களைத் தரிசிக்கலாம்.

வசந்தமண்டபத்தை அடுத்து அம்பாள்கோயில் உள்ளது. இரண்டாம் வாயிலைக் கடந்து உள்ளே சென்று முதற் பிராகாரத்தை வலமாக வரும்போது தென்மேற்கே விநாயகரும் மேற்கே முருகனும் வடமேற்கே கஜலக்ஷ்மியும் விளங்கக் காணலாம். கோஷ்டங்களில் தெற்கே தக்ஷிணாமூர்த்தி. மேற்கே திருமால், ஆஞ்சனேயர், வடக்கே துர்க்கை ஆகியோரைத் தரிசிக்கலாம். வலமாக வந்து வடக்கிலுள்ள சபையில் நடராசரை வழிபட்டு மகாமண்டபத்தை அடைவோம். நடராசருக்கு அருகில் பைரவர் சூரிய சந்திரர்கள்' நவக்கிரகங்கள் உள்ளனர்.

மகாமண்டபத்தில் சுதையாலான துவாரபாலகர் உள்ளனர். துவாரகணபதியை வழிபட்டு அருள்மிகு பாஸ்கரேசுரரை வழிபடுவோம். பாஸ்கரன் – சூரியன். சூரியனுக்கு அருள் புரிந்த மூர்த்தியாதலின் இப்பெயரால் இறைவன் வழங்கப்

படுகிறார். எதிரே நந்திபலிபீடங்களை அடுத்து, சூரியன் சுவாமியை வழிபடும் நிலையில் விளங்குவது இத்தலத்திற்குத் தனிச்சிறப்பு. சண்டேசுரர் மூவர் தனிக்கோயிலில் உள்ளனர். பங்குனிமாதம் 17, 18, 19 ஆம் நாட்களில் ஆண்டுதோறும் சூரியபூஜை நிகழ்கிறது. காலைக்கதிரவன் தன் ஒளிக்கிரணங்களால் இறைவனை வழிபடும் இந்நாட்களில் அன்பர்கள் பலரும் இறைவனை வழிபட்டு ஆனந்திக்கின்றனர்.

அம்பாள் சந்நிதியை அடைவோம். வாயிலில் துவாரபாலகியர் உள்ளனர். அம்பிகை, அருள்மிகு மங்களாம்பிகை தெற்குநோக்கி விளங்குகின்றார். இவருக்கு எதிரே நந்தி பலிபீடங்களும் கோபுரவாயிலும் உள்ளன. கோயில் திருப்பணி தொடங்கப்பட்டுப் பல ஆண்டுகளாக நிறைவுறாதநிலையில் உள்ளது.

மூர்த்திகள் :

இறைவன் திருப்பெயர் அருள்மிகு பாஸ்கரேசுவரர். சுயம்புமூர்த்தி. தமிழில் பரிதியப்பர் என வழங்கப்பெறுகிறார். அம்பிகை திருப்பெயர் அருள்மிகு மங்களநாயகி. இத்தலத்திலுள்ள சூரியன், கஜசம்காரமூர்த்தி, முருகன் தரிசித்தற்குரிய மூர்த்திகள் ஆவர்.

தீர்த்தம் - சூரிய தீர்த்தம். இது கோயிலின்முன்னால் உள்ளது. வயிற்றுநோய் மற்றும் குட்டம்முதலிய நோய்களைக் குணப்படுத்தும் தீர்த்தம். கோயிலின் பின்னே சந்திர தீர்த்தமும் மற்றும் தேவதீர்த்தம் ஆகியனவும் உள்ளன. தலமரம் – அரசு.

தேவாரம் :

திருஞானசம்பந்தர் அருளிய அரியதொரு திருப்பதிகமும் திருநாவுக்கரசர் சுந்தரர் அருளிய தேவாரப்பாடல்களும் உள்ளன. திருஞானசம்பந்தர் அருளிய இத்தலத்திருப்பதிகம் இறைவன் பிக்ஷாடனராய் எழுந்தருளி, தாருகாவனத்து முனிபன்னியர் நிறைகவர்ந்த புராணவரலாற்று நிகழ்ச்சியைக் குறிக்கிறது. இவ்வூரின் இயற்கைவளத்தைக் கூறுகிறது. பரவவல்லார் வினை கெடுக்கும் பரிதிநியமம் என்றும் இத்தலத்து இறைவரை வழிபடின் பிறப்பறும் என்றும், அவலம் அடையா என்றும் பதிகம் கூறுகிறது.

புராணவரலாறு :

பரிதி (சூரியன்) தன் குன்மநோய் (வயிற்றுநோய்) நீங்க இவ்வூரில் தீர்த்தம் உண்டாக்கி நீராடியும், இலிங்கம்

தாபித்துப் பூசித்தும், வழிபட்டு நலம்பெற்ருர் என்பது தல புராணத்தில் காணப்படுகிறது. அதனுல் இங்குள்ள சிவலிங்க மூர்த்திக்குப் பரிதீசர், பரிதியப்பர், பாஸ்கரேசுவரர் என்ற பெயர்கள் வழங்கப்பெறுகின்றன. இதனை மெய்ப்பிக்க ஆண்டு தோறும் பங்குனித்திங்கள் 17, 18, 19 ஆம் நாட்களில்சூரியபூஜை நிகழ்ந்துவருவதைக் காணலாம்.

பிரமசர்மா, அவர்மனைவி சுசீலை, ஆகியோர் தாங்கள் செய்த பாவத்தால் பருந்தும் கிளியுமாகச்சபிக்கப்பெற்று இத்தலத்திற்கு வந்து பழைய வடிவம் பெற்று முத்தியடைந்துள்ளனர்.

சிபிச்சக்கரவர்த்தியின் குதிரைப்பாகன் புல்செதுக்கியபோது இரும்புக் களைக்கொட்டுப்பட்டு இரத்தம் பெருகிய நிலையில் சிவலிங்கம் வெளிப்பட அதனை அறிந்த மன்னன் ஆலயம் எடுத்து அவ்விலிங்கத்தை ஆராதித்தான் எனக் கூறுவர்.

சேரநாட்டு அமைச்சர் ஒருவரின்மகன் பதுமலோசனன் பான் பஞ்சமாபாதகத்திற்குட்பட்டுக் கருங்குட்டம் உண்டாகி இத்தலத்திற்குவந்து தேவர்கள் தங்கள் கைகளால் அகழ்ந்த தேவதீர்த்தம் எனப்படும் கரதீர்த்தத்தில் நீராடி நோய் நீங்கப் பெற்று நலமுற்ருர் என்றும்,

தனதத்தன் என்னும் வணிகன் தன் செல்வங்களை இழந்து வறியனுய், தன் வறுமையும் பாவமும் தொலைய சூரியபுஷ்கரணி யிலும், சந்திரபுஷ்கரணியிலும் நீராடி வறுமைநீங்கிச் செல்வ வளம் பெற்று இன்புற்ருன் என்றும் கூறப்படுகிறது.

திருவிழா :

பங்குனி உத்திரத்தில் இத்தலத்தில் சிறப்புவிழா நிகழ்கிறது. இத்தலத்திலுள்ள முருகப்பெருமான் மிக்கவரதர். அன்பர்கள் இந்நாளில் காவடி எடுத்துவந்தும், பாற்குடம் கொண்டுவந்தும், வழிபடுகின்றனர். மற்றும் சித்திரைப்பூரணை விழாவும் கார்த் திகை விழாவும் மாதச்சிறப்புநாட்களும் கொண்டாடப்பெறு கின்றன.

பையர வம்விரி காந்தள் விம்மு பரிதிந் நியமத்துத்
தையலொர் பாக மமர்ந்தவனைத் தமிழ்ஞான சம்பந்தன்
பொய்யிலி மாலை புனைந்தபத்தும் பரவிப் புகழ்ந்தேத்த
ஐயுற வில்லை பிறப்பறுத்தல் அவலம் அடையாவே.

2. திருவெண்ணி

தஞ்சைமாவட்டத்தில் மன்னார்குடி தாலுக்காவில் தஞ்சை - திருவாரூர் புகைவண்டித்தொடரில் கோயில் வெண்ணி புகை வண்டி நிலையத்திலிருந்து வடக்கே 2. கி. மீ. தூரத்தில் உள்ளது இத்தலம். கோயில்வெண்ணி என இத்தலம் வழங்கப்படுகிறது. தஞ்சையிலிருந்து நீடாமங்கலம் செல்லும் பேருந்துச்சாலையில் சாலியர்மங்கலத்திற்கும் நீடாமங்கலத்திற்கும் இடையில் இத் தலம் உள்ளது. பேருந்துச் சாலைக்கு வடக்கில் ½ கி. மீ. தூரம் சென்றால் கோயிலை அடையலாம். நீடாமங்கலம் வந்தும் தஞ்சையிலிருந்தும் இவ்வூருக்குப் பேருந்துகளில் செல்லலாம்.

வெண்ணி மிகப்பழமையான ஊர். இவ்வூர் பண்டைக் காலத்தில் பெரியநகரமாக விளங்கியது. சங்ககாலத்தில் இவ்வூரில்தோன்றிய பெரும்புலவர் வெண்ணிக்குயத்தியார் எனப்படுவார். இவர்பாடிய புறநானூற்றுப் பாடல், கரிகாற் சோழனின் வெண்ணிப்போரைக் கூறுகிறது. இவ்வூரில் கரிகாற் சோழன் பகைவரோடு போரிட்டு வென்ற வெற்றி, புகழ் பெற்ற வெற்றியாகக் கூறப்படுகின்றது.

சேர,பாண்டியர்களையும் பதினொருவேளிரையும் பிறமன்னர் களையும் வெற்றிகொண்ட வெண்ணிப் போரை வெண்ணிக் குயத்தியார் பாடிய புறநானூற்றுப்பாடலும் (எண் 55, 246) முடத்தாமக் கண்ணியார்பாடிய பொருநராற்றுப்படையும்143–8. கூறுகின்றன. பாடல்வரிகள் :-

'கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை' புறம் - 66.

'ஆர்கலி நறவின் வெண்ணி வாயில்' அகம் 55, - 246.

'இருபெருவேந்தரும் ஒருகளத்தவிய
வெண்ணித் தாக்கிய ...... கரிகால்வளவன்'

பொருநர் 147 - 8.

இவ்வாறு சோழமன்னன் கரிகாற்பெருவளவனின் புகழ் பெற்ற போர்ச்செயல் நிகழ்ந்த இடமாக இவ்வூர் குறிக்கப்பட்டுள்ளது. வெண்ணி என்பது வென்றி என்பதன் மருஉவாக இருக்கலாம் என திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் குறித்துள்ளார்கள். வென்றியூர் என்பது வெண்ணியூர் என வழங்கி வெண்ணி எனச் சுருக்கி வழங்கப்பெற்றதாகலாம்.

கோயிலமைப்பு :

பெருந்துச் சாலைக்கு வடக்கே ½ கி. மீ. தூரத்தில் இத்தலம் உள்ளது. கிழக்குநோக்கிய சந்நிதி. எதிரே சூரிய தீர்த்தம் உள்ளது. கோயில் நகரத்தார் திருப்பணிபெற்று அழகோடு திகழ்கிறது. இராஜகோபுரத்தை அடுத்து நந்தி பலிபீடங்கள் உள்ளன. ஒரே பிரகாரம் மட்டும் உள்ளது. வலமாக வந்தால் தென்மேற்கில் விநாயகரும் மேற்கே முருகனும் வடமேற்கில் கஜலஷ்மியும் விளங்கக்காணலாம். கிழக்கே பைரவரும் நவக்கிரகங்களும் உள்ளனர்.

கோஷ்டங்களில் தெற்கே விநாயகர், தக்ஷிணாமூர்த்தி மேற்கு இலிங்கோத்பவர், வடக்கே துர்க்கை உள்ளனர். தரிசித்துக் கோயிலின் மகாமண்டபத்தை அடைந்தால் சுவாமி அம்பாள் சந்நிதிகளை ஒருங்கே தரிசிக்கலாம். அம்பிகை தெற்கே நோக்கி விளங்குகிறார்.

மகாமன்டபத்தில் சமயாசாரியர் திருவுருவங்கள் வண்ண ஓவியங்களாக அழகுற வரையப்பட்டுள்ளன. தலத்திருப் பதிகங்களின் கல்வெட்டுக்கள் பதிக்கப்பட்டுள்ளன. நடராஜர் பஞ்சமூர்த்திகள் பாதுகாப்பாகப்பேணி வைக்கப்பட்டுள்ளனர்.

துவாரவிநாயகர் துவராபாலகர்களைவழிபட்டு, சுவாமியைத் தரிசிப்போம். சுவாமியின் திருப்பெயர் அருள்மிகு வெண்ணிக் கரும்பேசுரர். இத்திருப்பெயரால் சுந்தரர் 'வெண்ணிக்கரும்பே' எனக் கூறிப் போற்றுகின்றார். பெயருக்கு ஏற்பச் சிவலிங்கம் கருப்பங்கழிகளை ஒன்று சேர்த்து வைத்தாற்போலுள்ளதைக் காணலாம். சுயம்பு மூர்த்தி. சுவாமியை வழிபட்டு அம்பாள் சந்நிதியை அடைவோம். அம்பிகை சௌந்தரநாயகி அழகிய நாயகியாகத் திகழ்வதைக் காணலாம்.

மூர்த்திகள் :

சுவாமிதிருப்பெயர் அருள்மிகு வெண்ணிநாதர். வெண்ணிக் கரும்பீசுரர் எனவும் வழங்கப்படுகிறார். அம்பிகைதிருப்பெயர் அருள்மிகு அழகியநாயகி. சௌந்தரநாயகி என வடமொழியில் வழங்கப்படுகிறார். தீர்த்தம் – சூரிய தீர்த்தம் சந்திர தீர்த்தம் முதலியன. தலமரம் – நந்தியாவர்த்தம். பங்குனி உத்திரம், சித்திரைப்பருவம் மற்றும் சிறப்புநாட்களில் விழா நிகழ்கிறது.

திருப்பதிகங்கள் :

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் அருளிய இரண்டு திருப்பதிகங்களும்

உள்ளன. மற்றும் பல தேவாரப்பாடல்களில் இத்தலம் குறிக்கப்பட்டுள்ளது.

திருவெண்ணி இறைவனை வணங்குவார்க்கு வினைகள் நீங்கும், அல்லல் தீரும், துயர்தோன்று என்று ஞானசம்பந்தர் அருளுகிறார்.

திருநாவுக்கரசர் வெண்ணியிறைவனை நெருநற்கண்டு பாடியனவாகக் குறுந்தொகைப் பாடல்கள் உள்ளன. திருத் தாண்டகப் பதிகம் இறைவனது பல்வகைப் பெருமைகளையும் விரித்துப்பாடியனவாக அமைந்துள்ளது.

புராணவரலாறுகள் :

கரும்பு நந்நியாவர்த்தக் காடுகளாக இருந்த இத்தலத்தில் இருமுனிவர்கள் தங்கட்குள்சண்டையிட்டுக்கூக்குரலிடுவதைக் கேட்ட முசுகுந்த சோழமன்னன் இங்கு வந்து அவர்களைச் சமாதானப்படுத்தி இங்குப் பெருமான் இருப்பதை அறிந்து கோயில் எடுத்து விழாக்கள் கொண்டாடினான் என்று கூறுகின்றனர்.

கல்வெட்டு :

இக்கோயிலில் பல கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுள் ளன. இராசராசன் கல்வெட்டுக்கள் ஆறு. குலோத்துங்கன் ஒன்பதுபடி எடுத்த தேதியில்லாத கல்வெட்டு ஒன்றும்உள்ளது. 13—10—1922 தேதியிட்ட இராசராசன் கல்வெட்டு நீளமான தாகும். அதன்படிநாடுசுத்தமலிவளநாடு. உள்நாடு வெண்ணிக் கூற்றம் ஊர் வெண்ணிநகரம். இறைவன் திருவெண்ணி உடையார் என அறிகிறோம். அந்தஇறைவனுக்கு நித்தவினோத வளநாட்டு வீரசோழவளநாட்டுப் புத்தூரான திரிபுவன சதுர்வேதி மங்கலத்துச் சபையார் திருநாமத்துக் காணியாக விட்ட நிலத்தின் எல்லை கூறப்படுகிறது. அந்நிலத்தில் விளைகிற பொருள்களின் அளக்கும் அளவும் கொடுக்கப்பட்டுள்ளது இனி, குலேத்துங்கன் கல்வெட்டுகள் "புனல்வாய்த்து" என்ற தொடக்கம் கொண்டவைகள். கோயிலுக்கு நிலங்கொடுக்கப் பட்ட விவரங்கள் அவைகளில் காணப்படுகின்றன. சுற்று வட்டத்துஊர்களின்பெயர்களும் ஆட்களின்பெயர்களும் அவை களில் எழுதப்பட்டுள்ளன. அவைகளில்ஒன்று 2—7—1196 ஆம் தேதியுடையது. ஆகவே 12 ஆவது நூற்றாண்டின் முற்பகுதியும் இக்கோயில் சிறந்திருந்த காலமாகும்.

கட்டுரை எண். 23

அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M A, B. Lit,
D. P. P. A., D. U. N, I. U.

கொடியே, இளவஞ்சிக் கொம்பே, எனக்கு வம்பே பழுத்த
படியே, மறையின் பரிமளமே, பனிமால் இமயப்
பிடியே, பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே,
அடியேன் இறந்திங்கு இனிப் பிறவாமல் வந்தாண்டு
[கொள்ளே. 22

அ. இளவஞ்சிக் கொடியே.

(1) 'இளையதாகிய வஞ்சிக் கொடி போன்றவள்' என்கிறார். அன்னையினை இளவஞ்சிக் கொடி என்றதன் காரணங்களை பின் வரும் விளக்கங்களில் காண்போம்.

(2) இளவஞ்சிக் கொடி சிறு காற்றுக்கும் ஆற்றாது துவண்டு வாடிவிடும். கொடியின் ஒரு பகுதியினைச் சிறிது விரலால் கிள்ளினாலும் வாடிவிடும். அவ்வாறு அன்னை தன் அடியாருக்கு ஏற்படும் சிறிய இன்னலையும் தாங்காது தான் வாடிவிடுவாள். அவளுக்கு அன்பர்பாலுள்ள அன்பும் கருணையும் அத்தகையது.

(3) குண்டலினி யோகத்தில் யோகிகளுக்கு மின்னல் கொடிபோல் அவளது தரிசனம் சில விநாடிகள் தோன்றி மறைகின்றது.

'தடில் லதாஸமருள' :- 'மின்னல் கொடிபோன்ற ஒளியுள்ளவள்' என சகஸ்ரநாமம் புகழுகின்றது.

"மலர்க்கமலை துதிக்கின்ற மின்கொடி" என முதற்பாடலிலேயே அபிராமி பட்டரும் குறிப்பிட்டார்.

(4) 'பக்திமத் கல்ப லதிகா' :- 'பக்தர்களுக்கும் கற்பகக் கொடி' எனவும் சகஸ்ரநாமம் வருணிக்கிறது. கற்பக விருக்ஷம்

(மரம்) என்று கூறுவதுதான் மரபு. இங்கு அன்னை பெண்பா லாகையால் லதா (கொடி) என்றது சகஸ்ரநாமம். வேண்டி யார்க்கு வேண்டியன நல்கும் அவள் சென்னை, மயிலாபுரியில் 'கற்பக வல்லி' என்ற பெயருடனேயே கோயில் கொண்டுள் ளாள்.

(5) சஞ்சீவிக் கொடிபோன்ற உயிரளிக்கும் மூலிகை யாகவும், பிறவியென்னும் நோய் நீக்கும் அரியதோர் மருந்தா கவும் ஆனவள் அம்பிகை.

"முன்னைப் பழம் பொருளே, மூலிகையின் நற்குணமே!" என, சந்தன மாரியம்மன் பாடலில் அழைக்கிறார் அன்னைதாசன் என்னும் கவிஞர்.

"மின்னற் கொடியனைய நிறத்தினை, கம்பை நதிக்கரையில் முளைத்தெழுந்து விளங்கும் மூலிகையினை எனது பிறவி நோய் நீங்க சிந்திக்கிறேன்" என காஞ்சி மூககவி தனது மூக 'பஞ்சசதி' யில் குறிப்பிடுகிறார்.

(6) கொடி ஒரு கொம்பினைச் சுற்றிப் பற்றிப் படருவது போல் அன்னை ஈசனைப் பற்றிப் படருகிறாள்.

"துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப் படரும் பரிமள பச்சைக் கொடி" என்பார் அபிராமி பட்டரும்.

(7) அப்பர் பெருமான் கண்ட கயிலைக் காட்சியினைக் குறிப்பிடும் சேக்கிழாரின் பாடலும், "வெள்ளி வெற்பின் மேல் மரகதக் கொடியுடன், தெள்ளு பேரொளிப் பவளவெற்பு" எனவே வருணிக்கிறது.

(8) "அசலகுலவல்லி, முரற்குறுமுனை நித்திலவல்லி, தேன் கமழ் உற்பல வல்லி, தாமரைப் பூவல்லி" என்றெல்லாம் உலகம்மை கலித்துறை அந்தாதியில் நமச்சிவாயப் புலவர் அன்னையினைப் பல கொடிகளாகக் கூறி மகிழ்கிறார்.

ஸ்ரீ சுத்தசத்வாநந்தா அவர்கள் அண்மையில் இயற்றிய திருமகள் அந்தாதியில் ஓர் அழகிய பாடல் வருமாறு :-

"விண்கொடியே! சொல்லும் வேதக் கொடியே! விரிகமலப்
பெண் கொடியே! நற்பெருந்தவத் தோர்கள் பெரிதுவக்கும்
பண் கொடியே! தூய பாட்டில் தழைக்கும் பசுங் கொடியே!
எண்கொடியே! என் இசைக்கொடியே! பொன் இலக்குமியே"

(9) பெண் கொடியான அன்னை இறைவனைப் பற்றிப் படர்ந்து, இருவரும் இணைந்தே இருத்தலால் இவ்வுலகும் அவ்வாறே இயங்குகின்றது என்பதனைத் திருமந்திரம்

" பைந்தொடி யாளும் பரமனி ருந்திடத்
திண்கொடி யாக திகழ்தரு சோதியாம்
விண்கொடி யாகி விளங்கி வருதலால்
பெண்கொடி யாக நடந்த துலகே. "

எனக் குறிப்பிடுகிறது.

ஆ. கொம்பே!

(1) பூங்கொம்பு போன்றவள் அல்லது மேன்மை யானவள் என்பது தோன்ற கொம்பே என அழைக்கிறார்.

(2) படர்ந்து பற்றும் கொடியென்று கூறியவர் 'கொம்பு' என்றும் கூறுகிறார். துவண்டு நிற்கும் கொடிக்குப் பற்றுக் கோடாக ஒரு கொம்பு வேண்டும். வாழ்வின் இன்னல்களாகிய காற்றுக்கு ஆற்ருது தன் அடியார் துவண்டு விழாமல் தாங்கும் பற்றுக்கோடாக அம்பிகையே இருப்பதால் 'கொம்பு' என்ருர்,

(3) மேன்மையான இயல்புகள் கொண்டமையாலும் அதிசயிக்கத்தக்க அழகுடைமையாலும் கொம்பு எனக்குறிப்பிட்டார் எனவும் கூறலாம்.

பரவை நாச்சியாரின் பேரழகு கண்ட சுந்தரர் " காமன் தன் பெருவாழ்வோ! கற்பகத்தின் பூங்கொம்போ!" என அதிசயித்து நின்றதனைச் சேக்கிழார் விளக்கக் காண்கிறோம். ஆகவே, கொம்பு என்றது அதிசயிக்கத்தக்க மேன்மைக் குணம் அல்லது பேரழகு நோக்கிக் கூறும் சொல் எனலாம்.

(4) "அடியவர் நாடொறும் பாகஞ் செஞ்ஞானம் படர்கின்ற கொம்பே" எனவும்

" கொம்பனை யாளைக் குவிமுலை மங்கையைத்
தும்பவிழ் கோதை வானவர் நாடியைச்
செம்பவ ளத்திரு மேனிச் சிறுமியை
நம்பிஎன் னுள்ளே நயந்துவைத் தேனே ".

எனவும் திருமூலர் குறிப்பிடுகிறார்.

(5) "அன்பர் கேட்டதெல்லாம் கொடுக்கின்ற கற்பகக் கொம்பே!" என உலகம்மை கலித்துறை அந்தாதி புகழுகிறது.

(6) மற்றும் ஆதரவற்றவர்களையும் அவள் தன் அருளால் கொடியைத் தாங்கும் பற்றுக் கோடான கொம்பினைப் போல் இருந்து காப்பதால் அவள் 'கொம்பு' ஆகிருள்.

பொதுவாக, உலகியலிலேயே, அன்னையை இழந்த குழந்தையினைத் "தாயில்லாப்பிள்ளை" என்று மிகவும்பரிவுடனும் அனுதாபத்துடனும் குறிப்பிடுகிரேம். எவ்வளவுதான் ஆண்களின் ஆதரவு இருந்தாலும் - வசதி - வாய்ப்புக்கள் இருந்தாலும் அங்ஙனம் குறிப்பிடுகிரேம். அதனுல் தாயே பிள்ளையினைத் துவண்டு விழாமல் தாங்கும் பற்றுக்கோடு என்பது தெளிவாகிறது.

பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அன்னையும் அவ்வாறு கொம்பாக நின்று தாங்குகிருள் என்பதில் வியப்பில்லை.

இ. என்க்கு வம்பே பழுத்தபடியே!

(1) "அடியேனுக்குப் பக்குவமில்லா நாளிற் பழுத்த அருட்கனியின் படிவமே!" என்கிருர்.

(2) 'வம்பே பழுத்தல்' என்ருல் பக்குவமல்லாத அல்லது அபக்குவமான நிலையில் பழுத்தல் என்று பொருள். அதாவது தனக்குப் பக்குவமில்லாத நிலையிலும் அம்பிகை அருள் செய்திருப்பதாகக் கூறுகிருர்.

பக்குவம் எய்தியவர்களுக்கே இறைவன் அல்லது இறைவியின் அருள்கிட்டும் என்றிருக்க எங்ஙனம் இவருக்கு வம்பே பழுத்தது?

அல்ல! அல்ல! பக்குவதில்தான் பழுத்தது!

"உனது அருளுக்கான பக்குவம் எய்திவிட்டேன் நான்" என்று கூறுவதே 'அபக்குவ' நிலையினைக் காட்டிவிடும். 'எனத தகுதி' என்பதைவிட அவளது கருணை என நினைப்பதே உண்மை அடியார்களின் இயல்பு.

(3) "உன்னைச் சிக்கெனப்பிடித்தேன் எங்கு எழுந்து அருளுவது இனியே?" எனக் கேட்கும் மணிவாசகரும் "ஊற்றையேன் தனக்கு வம்பெனப் பழுத்து, குடிமுழுதாண்டு வாழ்வுஅற வாழ்வித்த மருந்தே" எனப் பாடுதல் இதனை விளக்கும்.

ஈ. மறையின் பரிமளமே !

(1) "வேதங்களின் சுகந்தமே! அல்லது நறுமணமே!" என்கிறார்.

(2) 'சிவமணம் வீசுகிறது', 'தமிழ் மணம் பரவுகிறது', 'புகழ்மணம் ஓங்குகிறது'. என்பனபோல் 'மறையின்பரிமளம்' என்கிறார்.

அன்னையின் புகழ்இல்லாத வேதம் வெற்றுரையாகிவிடும். மணமில்லாக் காகிதப்பூப்போல் ஆகிவிடும். அதாவது வேதங்களை 'மலர்கள்' என்றால் அவற்றின் பொதிபொருளான – உட்பொருளான அம்பிகை அவ்வேதமலர்களின் மணமாவாள்.

உ. பனிமால் இமயப் பிடியே !

(1) "பனி நிறைந்த அல்லது குளிர்ச்சிபொருந்திய இமயமலையின் மகளாக வந்த பெண்யானையே!" என்றழைக்கிறார்.

(2) பெண்களின் நடையழகிற்குப் பிடியினை உவமை கூறுதல் மரபு. பனிமலையின்கண் அழகிய நடைபயின்று உலவியதால் 'பனிமால் இமயப்பிடி' என்றழைக்கப் பட்டாள்.

(3) இறைவனைக் களிறு என்றும் அன்னையினைப் 'பிடி' என்றும் கூறுவதில் நடையழகு மட்டுமின்றிச் சில உட்கருத்துக்களும் உண்டு.

யானை (பிடி மற்றும் களிறு) தன்னைக் கட்டிப்பிணைக்கும் கயிறு அல்லது சங்கிலியினைத் தானே பாகனிடம் எடுத்துத் தருவது போல் இறைவனும் இறைவியும் தங்களைப் பிணைக்க வல்ல 'பக்தி' என்னும் கயிற்றினைத் தாங்களே எடுத்துத் தருகின்றனர்.

அரசனோ, பாகனோ, சிறுகுழந்தையோ யாராகிலும், அவர்களைத் தன்மீது ஏற்றிக்கொள்ள, தானே குனிந்து உயரத்தைக் குறைத்துக்கொண்டு உதவுகிறது யானை.

இறைவியும் அவ்வாறே மிக உயர்ந்த நிலையில் இருக்கும் தன்னை உணரவும் அறியவும் தான் மிகவும் கீழே இறங்கிவந்து உதவுகிறாள்.

அசையாப் பொருளான மலைக்குக் கூடத் தன்னைக்காட்டி அதன்கண் உலவிய எளிமையினால் அவளைப் 'பனிமால் இமயப் பிடி' என்றார்.

ஊ. பிரமன் முதலாய தேவரைப் பெற்றஅம்மே !

(1) பிரமன்முதலியதேவர்கள் அனைவரையும் ஈன்றெடுத்த அன்னையே என்றழைக்கிறார்.

(2) ‘ஆப்பிரம்ம கீட ஜனனி’ – ‘பிரமன்முதல் நுண்ணுயிர்கள் ஈறாக அனைத்தையும் பெற்றவள்’ என சகஸ்ரநாமம் கூறுவதை முன்னரே கண்டோம்.

(3) இனி, பிறவாதநிலையினைவேண்டப்போகிறார். ஆகவே பிறவாமல்செய்யும் ஆற்றல் அவளுக்கு உண்டு என்பதனை முன்பே உறுதியாய்க் கூறிக்கொள்கிறார். அவளால் என்னை இனிப்பிறவாமல் செய்யமுடியம். ஏனெனில் அவள் படைப்புத் தொழிலுக்கு உரியவனான அப்பிரமனையும் பெற்றவள். படைப்பவனையும் படைத்தவள் என்னை இனிப் படையாமல்செய்வது அரியதில்லை என்பது கருத்து.

எ. அடியேன் இறந்திங்கு இனிப் பிறவாமல்வந்து ஆண்டு [கொள்ளே.

(1) உன் அடியவனாகிய யான் இறந்து இவ்வுலகில் இனிப் பிறவாமல், எழுந்தருளிவந்து ஆண்டுகொள்வாயாக.

(2) அடியேன் பிறந்துவிட்டதால் நிச்சயம் இறக்க வேண்டும். அவ்வாறுஇறந்தபின் மீண்டும் பிறவாதிருக்க வேண்டும். பிறத்தல் இறப்புக்கும் இறத்தல் பிறப்புக்கும் காரணமாகி “புனரபி ஜனனம் புனரபி மரணம்” என்று சங்கிலித் தொடராய்த் திகழ்கிறது.

ஆனால் உன் அடியவனாகிவிட்ட நான் இறந்தால் அது பிறப்புக்குக் காரணமாகக் கூடாது. பிறவா முத்தி நிலையினை அடைதல் வேண்டும்.

பிறப்புக்குக் காரணமான ஆசாபாசங்கள் அனைத்தும் நீங்கி முத்திஎய்துதல் வேண்டும். அதற்கானதகுதிகள் உடையவனாக என்னை ஆக்கிஅருள நீதான் எழுந்தருளிவந்து ஆண்டுகொள்ள வேண்டுமென்று விண்ணப்பிக்கிறார்.

வாழ்வில் அல்லலால் துவளும்பொழுது துணிவும் துணையும் எய்துதல் இப்பாடலின் பாராயண பலன் ஆகும்.

" வில்லியும் - பாரதியும் "

புலவர் திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ.

(மலர் 41. இதழ் 1, பக்கம் 51 இன் தொடர்ச்சி)

கம்பரின் இராமாயணம் பெற்ற அளவுக்கு வரவேற்பை - வில்லியின் பாரதம் தமிழகத்தில் பெறவில்லை என்பது உண்மை தான். காரணம், வில்லியின் கவிச்சுவை குறைவால் அல்ல. தமிழ் மண்ணின் மரபுகளோடு, பொருந்தி வராத கதை அமைப் பால் நேர்ந்த விளைவு இது. காப்பியம் என்ற அளவில் வில்லி பாரதம் தமிழுக்கு ஓர் அரிய வைப்பேயாகும். வில்லி தம் நூலைத் திருமாலின் இனிய புகழ் இடைஇடையே வருதல் நோக்கித் தாம் பாடியதாகக் குறிக்கிறார்.

'மன்னு மாதவன் சரிதமும் இடைஇடை வழங்கும் என்னும் ஆசையால் யானும் ஈது இயம்புதற்கு இசைந்தேன்' என்பன வில்லியின் வரிகள். பாரதியும் தாம், பாஞ்சாலி சபதம் இயற்றியதற்குக் காரணம் கூறுகின்றார். அவர் கூறும் காரணம் புதுமையானது. 1912இல், பாரதி வாழ்ந்த காலத் திலேயே பாஞ்சாலி சபதத்தில் முதற்பாகம் வெளியிடப் பெற்றது. இது சூதிட்டச் சருக்கம், அழைப்புச்சருக்கம் என இரண்டுஉட்பகுதிகளையும் 204 பாடல்களையும் கொண்டிருந்தது. பாஞ்சாலி சபதத்திற்குப் பாரதி தாமே, உரைநடையில் ஒரு முன்னுரை வரைகிறார். முகவுரைக்கு முன்னதாக இந்நூலைச் சிலருக்குக் காணிக்கையாகவும் வழங்குகின்றார். ஸமர்ப்பணம் என்ற தலைப்பில் அது அச்சிடப்பட்டுள்ளது.

> " தமிழ்மொழிக்கு அழியாத உயிரும் ஒளியும் இயலுமாறு இனிப் பிறந்து காவியங்கள்செய்யப் போகிறவரகவிக ளுக்கும், அவர்களுக்குத் தக்கவாறு கைங்கரியங்கள் செய்யப்போகிற பிரபுக்களுக்கும் இந்நூலைப் பாதகாணிக் கையாகச் செலுத்துகின்றேன் "

பாரதிக்குப் பிறகுத் தமிழ்மொழிக்கு அழியாத உயிரும் ஒளியும் ஊட்டவல்ல வரகவிகள் பிறந்தார்களா? அப்படிப் பிறந்தாலும், பிரபுக்கள் அவர்களை ஆதரித்தார்களா என்கின்ற கேள்விகள் கேட்கப்பட வேண்டியன. அது ஒரு தனி ஆய்வு.

பாரதி மறைவுக்குப் பிறகு அவரது இளைய சகோதரர் திரு. சி. விசுவநாதஐயர் பாரதி நூல்களைப் பதிப்பிக்கப் 'பாரதி

பிரசுராலயம்' ஒன்றை நிறுவினர். 1924இல் பாஞ்சாலி சபதம் முழுவதும் - பாரதி மறைவுக்குப்பின் பாரதி பிரசுராலயத்தாரால் வெளியிடப்பெற்றது. பாஞ்சாலி சபதம் - ஓர் பிரார்த்தனை என்ற தலைப்பில் அதில் ஒரு முன்னுரை வெளிவந்திருக்கிறது.

'வரகவிகளுக்கும் - பிரபுக்களுக்கும் பாரதி இந்த நூலைப் பாத காணிக்கையாகச் செலுத்தியிருக்கிறார். பாரதியாருக்குப் பின்பு இன்னும் வரகவிகள் தமிழ் நாட்டில் யாரும் தோன்ற வில்லையா: தோன்றியிருந்தால் பாரதியின் நூல்கள், இன்னும் இந்த ஸ்திதியில் அதிக காலம் கதியில்லாமலிருக்காது என்று எண்ணுகின்றோம்: எங்கு பார்த்தாலும் மேல் நாட்டின்வழியாக விளம்பரமும், வியாபாரமும், தோன்றுகிறதே ஒழிய உண்மை யான விழிப்பு இன்னும் தமிழ்நாட்டில் காணோம்: எவனுக்குத் தாய் பாஷையில் உண்மையான அன்பு ஏற்படவில்லையோ, அவனிடமிருந்து தேச கைங்கரியம் எதிர்பார்ப்பது வீணே: சகோதர - சகோதரிகளே 'சீக்கிரம் விழியுங்கள்: தாய் பாஷை யைக் கவனியுங்கள்: அதன் முன்னேற்றத்திற்கு வேண்டிய வழியைத் தேடுங்கள்' என்று நடையிடும் இப்பதிப்பின் முன்னுரை, செந்தமிழ்த் தேவிக்கு ஒரு பிரார்த்தனையையும் வைக்கிறது:

> "செந்தமிழ்த் தேவியே: பாரதியார் எதிர்பார்த்த வரகவி
> களும், பிரபுக்களும் தோன்றியிருந்தால் அவர்களுக்கு
> மெய்ஞ்ஞானம் புகட்டி, அவர்கள் கடமையைக்
> கற்பி: இன்னும் அவர்கள் தோன்றியிருக்காவிட்டால்
> காலதாமதமின்றித் தோற்றுவிப்பாயாக:"

இந்த அரிய முன்னுரை - பாரதி காலத்திலும் - அவருக்குப் பின்னும் கூட - நமது தமிழ்நாட்டில் - தமிழ் எழுச்சியோ, நாட்டுப்பற்றோ சிறந்திருக்கவில்லை என்பதற்கு நல்ல எடுத்துக் காட்டு. மொழி உணர்வு இல்லாதவனுக்கு - நாடு பற்றிய உணர்வு வரும் என்று எதிர்பார்த்தல் வீணே: பாரதியின் சமர்ப்பணம் வீணாகிவிடவில்லை, பாரதிக்குப் பிறகு அவரது கவிதா மண்டலத்தில் சிலவரகவிகள் தோன்றவே செய்தார்கள். ஆனால் அவர்களை ஆதரிக்கும் பிரபுக்கள் தோன்றினர்களா என்பது வேறு கேள்வி.

பெண்விடுதலை நோக்கில் பாஞ்சாலி சபதம் எழுந்தது என்பது உண்மை. என்றாலும் மொழிப் பற்றும் - நாட்டுப் பற்றும் மக்கள் மத்தியில் உருவாகவேண்டும் என்பதே பாரதி யின் நோக்கமாக இருந்தது. வேறு எந்த தமது நூலுக்கும் இல்லாமல் பாரதி - பாஞ்சாலி சபதத்தின் முதல் பாகத்திற்கு

ஒரு முகவுரை வரைகிறார். இந்த முகவுரைபற்றி முன்னரே நினைவு கூர்ந்தோம். பாரதி இங்கே தாம் பாஞ்சாலி சபதத்தைத் தமிழில் பாடியதற்கு ஒரு காரணம் கூறுகின்றார். பாரதிபற்றிய சிந்தனைகளில் - அவரைப்பற்றிய மதிப்பீட்டில் இந்த முகவுரைக் குச் சிறப்பான ஒரு இடம் உண்டு. பாரதி தொடங்குகின்றார்.

" எளிய பதங்கள் – எளிய நடை, எளிதில் அறிந்து
கொள்ளக் கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்
பும் மெட்டு இவற்றினையுடைய காவியம் ஒன்று
தற்காலத்திலே செய்து தருவோன், நமது தாய்மொழிக்குப்
புதிய உயிர் தருவோனாகின்றான் : ஓரிரண்டு வருஷத்து
நூற் பழக்கமுள்ள தமிழ் மக்கள், எல்லோர்க்கும் நன்கு
பொருள்விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள
நயங்கள் குறைவு படாமலும் நடத்துதல் வேண்டும் : "

பாரதியாரின் நோக்கில், அவர்காலச் சூழலில் எளிய மக்களும் படித்துப் பொருளறியத்தக்க – காப்பியம் ஒன்று படைத்தல் – மெல்ல நசித்துக் கொண்டிருந்த தமிழ்த்தாய்க்கு மீண்டும் உயிரூட்டும் முயற்சியாக இருந்ததை அறிகிறோம் : மேலும் பாரதி முகவுரை தொடர்கிறது :

" காரியம் மிகப்பெரிது : எனது திறமை சிறிது : ஆகையால்
இதனை எழுதி வெளியிடுகின்றேன் : பிறர்க்கு ஆதர்சமாக
அன்று : வழிகாட்டியாக."

எளிய நடைக் காப்பியம் என்ற வகையில் பாஞ்சாலிசபதத்தில் பாரதியின் ஆசை வெற்றிபெற்றே யிருக்கிறது: மிகப்பெரிய காரியத்தை அவர் சாதித்தேயிருக்கிறார் : பாஞ்சாலி சபதத்தை வில்லியிலிருந்து மாற்றி வடிவமைத்தாரே என்றுஎண்ணுகிறோம். பாரதியார்,

" எனது சித்திரம் வியாசர் பாரதக் கருத்தைத் தழுவியது :
பெரும்பான்மையாக இந்நூலை வியாச பாரதத்தின் மொழி
பெயர்ப்பென்றே கருதிவிடலாம். அதாவதுகற்பனை— திருஷ்
டாந்தங்களில் எனது சொந்தச் சரக்கு அதிகமில்லை : தமிழ்
நடைக்கு மாத்திரமே நான் பொறுப்பாளி "

என்று தெளிவுபடுத்துகின்றார். வில்லியை மாற்றியமைக்கப் பாரதியார் முயலவில்லை. வில்லி,

" முன் சொலாகிய சொல்எலாம் முழுதுணர் முனிவன்
தன் சொலாகிய மாப்பெருங் காப்பியந் தன்னைத்
தென் சொலால் உரை செய்தேன் "

என வியாசரைத் தமிழ்ப் படுத்தாகக் கூறுதல்போலவே பாரதியும் – வியாசரையே முதல் நூலாகக் கொண்டதாகக் கூறுகிறுர். கூறினும் வில்லியின் பாதிப்புப்பாரதியிடம் நிறைவாக அமைந்திருக்கிறது.

தமிழ் ஜாதிக்குப் புதியவாழ்வு தரவேண்டுமென்று
கங்கணம் கட்டி நிற்கும் பராசக்தியே என்னை இத்தொழி
லிலே தூண்டினுள் ஆதலின், இதன் நடை நம்மவர்க்
குப் பிரியந்தருவதாகும் என்றே நம்புகின்றேன் :
ஓம் வந்தே மாதரம் :

என்று முகவுரையை அமரகவி நிறைத்திருக்கிறுர் :

எல்லாரும் படித்தறியத் தக்க எளிய நடைநூல் பாஞ்சாலி சபதம் : என்ருலும் இதிலேயும் எளிதிலே சில நுட்பங்கள் நம்மவர்க்கு விளங்காது என்றுகருதி. பாரதியார் தமது பாஞ்சாலி சபத முதற்பாகத்திற்கு, ஒரு விளக்கமும் வரைந்திருக்கிறுர். பிற்காலப் பாரதி பதிப்புக்களில் 'பொருள்விளக்கமும் குறிப்புக் களும்' என்ற இப்பகுதி இடம்பெறவில்லை. பாரதியார் பாஞ்சாலி சபதத்தின் பல நுட்பமான பகுதிகளுக்குத் தானே எழுதியிருக் கும் இவ்விளக்கவுரைப்பகுதி அரிய பல கருத்துக்களைச் சுட்டிச் செல்கிறது. குறிப்பாக, பாஞ்சாலி சபதப் பாடல்களுக்கு இன்னது 'மெட்டு' என்று விளக்குகின்ருர்.

உதாரணமாகஅவர் எழுதுவது: முதற்பாட்டிலிருந்து 18 ஆம் பாட்டு வரையில் நொண்டிச் சிந்து,

லாலல லாலல லா – லல
லாலல லாலல லால லலா

என்ற மெட்டில் நடப்பது என்று குறிக்கின்ருர்.

லாலல லாலல லா – லல
கற்பனைத் தேனித ழாள் – சுவை
லாலல லாலல லால – லலா
காவிய மெனுபனிக் கொங்கையினுள் :

நயமான உரைப் பகுதிகள் பல, 'வேதத் திருவிழியாள். அதில், மிக்க பல உரையெனும் கருமை இட்டாள்' எனவரும் தமது சரஸ்வதி வணக்கப்பாடலுக்கு அவர் தீட்டும் உரை, நயப்பாடு மிக்கது. 'வேதமாகிய கண்ணில் பலவித வியாக் கியானங்கள், பாஷ்யங்கள் எனும் கரிய மையைப் பூசியவள். என்று கூறிய கவிஞர் – உரை என்ற பெயரில் இல்லாததை எல்லாம் இருக்கிறது என்று காட்டும் உரைகாரர்களைக் கேலி செய்கிறுர். (தொடரும்)

குடமுழ நந்தீசன்

நக்கீரன் வழியடிமை,

புலவர் திரு. பி. மா. சோமசுந்தரம்.

1. வாசகன்

அப்பர்பெருமான் அருளிய 'ஆமயந்தீர்த் தடியேனை' எனத் தொடங்கும் தனித்திருத்தாண்டகத்தில்,

" சூராமலரோ டராமதியஞ் சடைமேற் கொண்டார்
குடமுழநந் தீசனைவா சகனுக் கொண்டார்
சிராமலைதஞ் சேர்விடமாத் திருந்தக் கொண்டார்
தென்றனெடுந் தேரோனைப் பொன்றக் கொண்டார்
பராபரனென் பதுதமது பேராக் கொண்டார்
பருப்பதங்கைக் கொண்டார் பயங்கள் பண்ணி
இராவணனென் றவனைப்பே ரியம்பக் கொண்டார்
இடருறுநோய் தீர்த்தென்னை யாட்கொண் டாரே."

எனவரும் பாடற்கண் உள்ள 'குடமுழநந்தீசனைவாசகனுக் கொண்டார்' என்ற தொடர்க்குக் குடமுழா முழக்கும் நந்தி தேவரை மாணிக்கவாசகராகத் தோன்றும்படி திருவுள்ளங் கொண்டார் என்று பொருள் உரைப்பர் ஒருதிறத்தார். இவ்வுரை பண்டை ஆசிரியன்மார்க்கும் உடம்பாடேயாகலான் மரபுரையாகும் என்று கூறுவாரும் உளர். அத்தொடர் அப்பொருள் படுவதன்று. வேறுபொருள் உடையது என்பர் மற்றொரு திறத்தார். ஆக இருதிறத்தார் ஆசிரியன்மார் என்க.

2. உரைவிளக்கம்

நந்திதேவரே மணிவாசகராய்த்தோன்றினர் என்போர் திருவாதவூரடிகளார் தேவார ஆசிரியன்மார் மூவர்க்கும் முற்பட்டவர் என்ற கோட்பாட்டினர். இவர் கூறுமாறு :-

"மேற்கூறிய இரண்டு பாடல்களுள், முதலாவதி லுள்ள "நரியைக் குதிரை செய்வானும்" என்பதற்குப் பொருளும் சரித்திரமும் வெளிப்படை. இரண்டாவதி லுள்ள 'குடமுழநந்தீசனை வாசகனுக் கொண்டார்' என்பதற்குப்பொருளும் அதிலுள்ளசரித்திரமும் ஆராய் தற்பாலன. இந்த வாக்கியத்திற்கு (சிவபெருமான்)

குடமுழாவை வாசிக்கும் திருநந்திதேவரை ஸ்ரீமாணிக்க வாசகராக அவதரிக்கும்படி திருவுளத்திற் கொண் டருளினரென்பது பொருள். குடமுழா ஒருவகை வாத்தியம். வாசகன் – ஸ்ரீ மாணிக்கவாசகர். பண்டைக் காலத்திற் பூமியிற் பௌத்தமதம் அதிகரித்தபொழுது வேதாகம ஒழுக்கங்குன்ற அக்குறையை அகற்றக் கருதிய தேவர்களுடைய பிரார்த்தனைப்படி சிவாக்ஞை யால் திருநந்திதேவர் ஸ்ரீ வாதபுரத்தில் ஸ்ரீ சம்புபாதா சிருதரென்னும் பிராஹ்மணோத்தமருக்கும் அவர் பத்தினியார் சிவஞானவதியார்க்கும் புத்திரராக அவதரித்தருளினரென்பது திருப்பெருந்துறையின் வட மொழிப் புராணமாகிய ஸ்ரீ ஆதிகைலாஸமஹாத்மியம் 39–ஆம் அத்தியாயத்திலும் ஸ்ரீ மாணிக்கவாசகருடைய வடமொழிச் சரித்திரமாகிய ஸ்ரீ மணிவாக்கியசரித்திரம் 6–ஆம் அத்தியாயத்திலும் விரித்துக் கூறப்பெற்றிருத் தலின் இதற்கு இதுவே பொருளென்று தெரிகிறது. "இதனால், ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகள் திருநாவுக்கரசு நாயனார்க்குக் காலத்தால் முந்தியவரென்று நன்குபுலப் படுதல் காண்க. (டாக்டர் உ. வே. சாமிநாதையர் – நம்பிதிருவிளையாடல் பதிப்பு – 35, 36.)

பண்டைத் தமிழ்ப்பனுவல்களை ஆய்ந்து பதிப்பிக்கும் அரும் பணி ஆற்றியவரும் தமிழ்த்தாத்தா என்று போற்றப்படுபவரும் ஆன இவர்தம் உரைநடையில் வடசொற்களும் வடவெழுத்துக் களும் மலிந்திருத்தல் கருதற்பாலதே. மறைமலையடிகளார் அப்பர்பெருமான் அருளிய 'குடமுழ நந்தீசனை வாசகனாக் கொண்டார்' என்பதுபற்றி விரிவாக ஆராய்ந்து அது மாணிக்க வாசகரைக் குறிப்பதே என்று அறுதியிட்டுள்ளார். மாணிக்க வாசகர் வரலாறுங் காலமும் என்ற அவர்தம் நூல்காண்க.

3. உரைக்கு மறுப்பு

இவ்வுரை பிழைபடுவது என்போர் மணிமொழிப்பெருமான் தேவார ஆசிரியன்மார்க்குப்பிற்பட்டவர்என்றகோட்பாட்டினர். இச்சார்பினர்ஆய தஞ்சை சீனிவாசபிள்ளையவர்கள், தாம் வரைந்த 'தமிழ்வரலாறு' என்ற நூற்கண் இவ்வுரையை மறுக்கு மாறு :

(அ) வாதவூரடிகள் வரலாற்றை வழுத்தும் தமிழ்நூல் கள் நந்திதேவரே மணிவாசகராகத் தோன்றினர் என்று கூறினவல்ல. 'மாயனிடும் புத்தவிருளுடைந்தோட வந்தொருவர், சேயவிளம் பரிதியெனச் சிவனருளாலவ தரித்தார்' என்ற பரஞ்சோதி திருவிளையாடல் ஒருவர்

தோன்றினர் என்ற அளவில் அமைவதாயது. ' நன்னெறி விடையிற் போந்தோர் நன்கணத் தலைவர் நாம, மின்னெறி வாதவூர, ரென்னவந் துதயஞ் செய்தார் ' என்பது நம்பிதிருவிளையாடல். ' கணநாதர் தமிலொருவர் விடையிற்போந்து கமழ்மதுக மகிழ்வாத புரத்து வாழுந், தணராமாத்தியர்குலத்துட் டோன்றி' என்பது கடம்பவன புராணம். ' விடைகொண்டு பரம னருள் மேற்கொண்ட கணநாதர், உடைகொண்ட கடன்மடந்தை யுவப்பெய்த வாதவூர், நடைகொண்ட சம்புபாதாசிருதர் நன்மனையாள், அடைகொண்ட திரு வயிற்றினங்குரிக்குங் கருவானார் ' என்பது திருப்பெருந் துறைப் புராணம். இம் மூன்றும் கணநாதர் என்றே கழறின ' தென்னவன் செங்கோன் முதல்வர் திருவவ தாரஞ்செய்தார் ' என்ற திருவாதவூரடிகள் புராணம் அவர்தம் முன்னிலைமை பற்றி யாதொன்றும் மொழிந் திலது.

(ஆ) சாமிநாதையர் காட்டிய இரு வடமொழி நூல்களே மணிவாசகரை நந்திதேவர் என்பன. தமிழ்நாட்டிலே தோன்றித் தமிழமைச்சராய்த் திகழ்ந்து தமிழ்ப்பா அருளிய மணிவாசகர் வரலாற்றுண்மையைத் தமிழறி ஞர்மார் அறியாராயொழிய வடமொழி வாணரே அறிந்து வழுத்தினரா?

மேற்காட்டிய தடைகள் தமிழ்வரலாறு பக்கம் 98 முதல் 99 வரை விரிவாக நிகழ்த்தப்பட்டு உள்ளன.

4. மறுப்புரைவன்மை ஆராய்ச்சி

இவர் தென்மொழிப்புராணங்கள் என்று கொண்டவை வடநூல் மொழிபெயர்ப்புக்களே அன்றிப் பெரியபுராண மொத்த முதல் நூல்களோ வரலாற்றுணர்வு கூடிய நூல்களோ ஆகா. எனவே ஆதிகைலாசமகாத்துமியத்தையும் மணிவாக்கிய சரித்திரத்தையும் எவரேனும்மொழிபெயர்த்திருப்பின் அவற்றை யும் தென்மொழிப் புராணங்களில் சேர்த்து இரு தென்மொழி நூல்களே நந்திதேவர் மாணிக்கவாசகராக வந்தார் என்பன. பெரும்பாலானவை அவ்வாறுகூறிற்றில்லை என்று தடைகிளத்து வர் போலும்! அன்றியும் தென்மொழிப்புராணம் என இவர் கூறும் நூல்கள் மொழிபெயர்ப்புகளே என்பது அந்நூல் களாலேயே பெறப்பட்டாலும் அவை வடமொழி நூல்களை வழுவறவுணர்ந்து இயற்றப் பட்டனவும் ஆகா? என்னை?

" அடிகள் ஆதிசைவ மரபினர் என்று வடமொழி ஆலாசியங் கூறியதைச் சற்றும்உற்றுநோக்காது அவர் அமாத்தியகுலம் என்று தமிழ்நூல்கள் புகன்றமை வியப்பை விளைக்கின்றது. வடநூலினை நேரே கற்று

அதனைத் தமிழிலே மொழிபெயர்க்காது வடமொழி வாணர் கூறுவதைக் கேட்டுத் தமிழ்நூலுடையார் தாங் கூறுங் கதையை எழுதினராதல் வேண்டும்''

என்று திரு. கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் மணிவாசகப் பெருமான் வரலாறு என்ற தம் நூல் பக்கம் 12-இல் கூறலான் என்க. பரஞ்சோதி திருவிளையாடல் அமாத்தியகுலம் எனவும் ஏனைய ஆமாத்திகுலம் எனவுங் கூறல் நோக்கற்பாலதே. கா. சு. பிள்ளையவர்கள் கூற்று வாய்மையே என்பது

"சிவன் சத்தியைச் சபிக்கினும் குமரனைச் சபிக்கினும் சிவனைச் சபித்ததாகவே ஆம் என்னுமுண்மை புலங் கொள அறியாமே அத்தலபுராணத்தில் அக்கதை இயற்றப்பட்டதென்பதற்கு "வேழமுகத்தனை விதித்த சாபப்பெருவலி தன்னைச் சாரும் பெற்றியால் சாபங் கூறுன்'' என்பது சான்று பகரவே நிற்கின்றது; அச்செய்தி ஆலாசிய மகாத்மியத்துமின்று; இந்த ஆலாசிய மகாத்மியம் காந்தபுராணத்ததென அம் மகாத்மியத்திலெழுதப்பட்டிருப்பினும் அந்தப்புராணத் தில் யாண்டேனுமுள தன்று. ஒல்லைநூலாயுள்ள அப் புராணத்தின்கண் அம் மாத்மிய மென்ப திருத்தற் கிடனுமின்று. என்னை? பிற்காலத்த திருவாதவூரடிகளது சரித்திரமும் திருஞானசம்பந்தப் பெருந்தகையினது சரித்திரமும் அதனுழை எழுப்பட்டிருக்கின்றமையின்''

என்று பாம்பனடிகளார் தம் தகராலயரகசியத்தில் அருளிச் செய்திருத்தலாலும் உணரப்படும். அன்றியும் தலபுராணங்க ளாய தென்மொழி, வடமொழி நூல்களின் திறமும் இற்றென இதனால் அறியலாகும். இத்தகு நூல்களைக்கொண்டு அப்பர் பெருமான் திருமொழியை மறுக்கப்புகுவார் செய்கை எலியைக் கொண்டு புலியை விரட்டப் புகுவார் செய்கையையே ஒக்கும். திருவிளையாடல் முதலியன தலபுராணங்கள். அப்பர்பெருமான் அருளிச்செயல் மறைமொழி. மறைமொழியை மறுக்கத் தல புராணந்தேடுதல் மதியுடைமைஆகாது. யாம்அவர்மொழியைத் தாழ்வுபடுத்தினேமல்லோம். அவர்மொழிக்கு மணிவாசகர் என்று உரைகாண்பாரையே தாழ்வுகாணப் புக்கோமெனில் அவ்வுரையை மறுக்கும் நீவிர் அதற்குரிய மெய்ப்பொருளைக் காட்டவலியிலாமே நும்மில் ஒவ்வொருவரும் தத்தமக்குத்தோற் றியவாறே உரைகூறி அப்பர்மொழியையே மயங்கக் கூறல் எனும் குற்றத்துக்கு ஆட்படுதல் தாழ்வுபடுத்துவதன்றே என்று கூறுக. இவ்வாறு பற்பல உரைகூறிப் பயனிலவாய்க் கழியும் இவர்தம் செயலைப் பிறிதோரிடத்துக் காட்டுவேம். (தொடரும்)

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் இருபத்தாருவது குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்மநட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு கார்த்திகைத்திங்கள் 30-ம் நாள் (15-12-81) செவ்வாய்க் கிழமையன்று காலை திருவெண்ணியூர் ஸ்ரீ வெண்ணிநாதசுவாமி திருக்கோயிலிலும், மாலை திருப்பரிதி நியமம் ஸ்ரீ பரிதியப்பர் திருக்கோயிலிலும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. தலத்திருப்பதிகப் பாராயணம் நிகழ்வுற்றது. மாலை, திருப்பரிதிநியமம் கோயிலில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர் வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ. அவர்கள் தலத்திருப்பதிகங் களை விளக்கி விரிவுரை ஆற்றினர். ஆதீன அடியவர் ஸ்ரீ நெல்லை யப்ப சுவாமி ' மெய்ப்பொருள்நாயனர் ' என்ற தலைப்பில் உரை யாற்றினர். அச்சிடப்பெற்ற தலத்திருப்பதிகநூல் வந்திருந்த அன்பர்கட்கு வழங்கப்பட்டது. அன்பர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

திருவெம்பாவை விழா

திருவையாற்றில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 4—1—82 முதல் 8—1—82 வரை ஐந்து நாட்கள் திருவெம்பாவை விழா நிகழ்வுற்றது.

4—1—82 திங்கட்கிழமை காலை, தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி, மார்கழி மாதச் சிறப்பு வழிபாடாற்றினர்கள். மாலை 6-30 மணிக்குத் திருவெம் பாவை விழாவைத் தொடங்கி வைத்து அருளாசி வழங்கி, திருவெம்பாவைப்பாடல்களைப் பண்ணிசையோடு மனப்பாடம் செய்து பாடிய தேவார வகுப்புக் குழந்தைகட்குப் பரிசுகள் வழங்கியருளினர்கள். திருவெம்பாவை விழாவில் வித்துவான் திரு. இரா. செல்வக்கணபதி எம்.ஏ. அவர்கள் 'மாணிக்கவாசகர்' என்ற தலைப்பிலும் திரு. சுவர்ணகாளீஸ்வரன் 'திருவெம்பாவை' என்ற பொருளிலும் விரிவுரையாற்றினர். மாயூரம் கணநாதர் பொம்மை நாடகசபையினர் பொம்மலாட்ட நிகழ்ச்சி நடை

பெற்றது. அன்பர் பலர் விழாவிற் கலந்து கொண்டு சுவாமி தரிசனம், குருதரிசனம் செய்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயனுற்றனர்.

ஆதீனத் திருக்கோயில்களில்

தருமையாதீன அருளாட்சியில் விளங்கும் திருக்கோயில்களில் திருவாதிரை விழாநாட்களில் 4—1—82 முதல் 8—1—82 முடிய ஐந்து நாட்கள் திருவெம்பாவை விரிவுரை தக்க அறிஞர்களைக்கொண்டு நிகழ்த்துவிக்கப்பெற்றது. தலப் பெருமக்கள் விரிவுரை கேட்டும் ஆலய வழிபாடாற்றியும் பயனுற்றனர். வைத்தீஸ்வரன்கோயில் அருள்மிகு வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் புலவர். திரு. இரா. செல்வக்கணபதி, எம். ஏ. அவர்களும், சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரித் துணைத்தமிழ்ப் பேராசிரியர் திரு. வி. பழநியப்பன் எம்.ஏ., அவர்களும், திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான். திரு. சுவர்ணகாளீஸ்வரன் அவர்களும் திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர் வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., அவர்களும் திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் திருப்பனந்தாள்செந்தமிழ்க்கல்லூரிமுதல்வர் வித்துவான். திரு. கு. சுந்தரமூர்த்தி, எம். ஏ. அவர்களும், திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான். திரு கா. ம. கண்ணப்பன், பி. லிட் அவர்களும் குத்தாலம் ஸ்ரீஉக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஆக்கூர் அரபு உயர்பள்ளித்தமிழாசிரியர் திரு. சி. சிவசங்கரன், எம். ஏ. அவர்களும் பேரளம் ஸ்ரீ சுயம்புநாத சுவாமி தேவஸ்தானத்தில் கவிஞர். திரு. ஞானச்செல்வன், எம்.ஏ. அவர்களும் திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் வித்துவான் திரு. சு. மு. சுந்தரராஜன் எம். ஏ அவர்களும் விரிவுரையாற்றினர். விழா நாட்களில் திருவெம்பாவை பண்ணிசையுடன் ஓதப்பெற்றது. தலப்பெருமக்கள் கேட்டுப் பயனுற்றனர்.

பொன்னூசல் விழா

வேளூரில்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் திருப்பொன்னூசல் விழா 31—12—81 வியாழக் கிழமையன்று தொடங்கிப் பத்துநாட்கள் நடைபெற்றது. இந்நாட்களில் இறைவனையும் இறைவியையும் ஊஞ்சலில் எழுந்தருளச் செய்து திருவெம்பாவை ஓதி வழிபாடு

நிகழ்த்தப்பெற்றது. 9—1—82 சனிக்கிழமை பொன்னூசல் விழா நிறைவுற்றது. அன்று மார்கழித் திருவாதிரையாதலால் ஸ்ரீ நடராஜர் அபிஷேகமும் திருவீதியுலாவும் சிறப்பாக நடைபெற்றன. அன்பர் பலர் வழிபட்டுப் பயன்பெற்றனர்.

சீகாழியில்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் ஊஞ்சல் உற்சவம் 31—12—81 வியாழக்கிழமையன்று முதல் பத்துநாட்கள் நடைபெற்றது. நாள்தோறும் மாலையில் சுவாமி அம்பாள் பிராகாரத்தில் வலம் வருதலும் ஊஞ்சலில் எழுந்தருளச் செய்தலும் காலை மாலை இருவேளைகளிலும் மாணிக்க வாசக சுவாமிகள் பிராகாரத்தில் எழுந்தருளிவரத் திருவெம்பாவை ஓதித் தீபாராதனை நிகழ்த்துதலும் நடைபெற்றன. 8—1—82 வெள்ளியன்று இரவு திருவாசகத்தின் ஒருபகுதியாகிய திருப்பொன்னூசல் ஓதித் தீபாராதனை நிகழ்த்தப்பெற்றது. 9—1—82 சனிக்கிழமை திருவாதிரைத் திருநாள் ஆதலால் ஸ்ரீ நடராசப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. திருவீதியுலாக் காட்சி நடைப்பெற்றது. அன்பர் பலர் தரிசித்துப் பயனுற்றனர்.

தருமையாதீனம்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின்
மார்கழிமாதச் சிறப்பு வழிபாடு

மார்கழிமாதத்தை வழிபாட்டிற்குரிய மாதமாக நம் முன்னோர்கள் கொண்டுள்ளனர். சைவ - வைணவத் திருக்கோயில்களில் வைகறைப்போதில் திருப்பள்ளியெழுச்சிவழிபாட்டையும் சிவன்கோயில்களில் திருவாதிரைப் பெருவிழாவையும் திருமால் திருக்கோயில்களில் வைகுண்ட ஏகாதசிப் பெருவிழாவையும் ஏற்படுத்தி வழிபட்டு வருகின்றனர். இம்மாதம் தேவர்களின் விடியற்காலம் என்றும் அவ்விடியற்காலவேளையில் இறை வழிபாடு செய்து இறையருள் பெறவேண்டும் என்றும் கருதி இம்மார்கழிமாத வழிபாட்டை நம் முன்னோர்கள் மேற்கொண்டு உள்ளனர். "மாதங்களுக்குள் மார்கழி மாதமாக இருக்கிறேன்' என்று பகவத்கீதையில் கிருஷ்ண பரமாத்மா கூறியிருக்கிறார் என்பது இம்மாதத்திற்கு மேலும் சிறப்புத் தருவதாகும். இம் மாதத்தில் இறைவழிபாட்டை மேற்கொள்வோர், இவ்வாண்டு முழுவதும் செய்யும் செயல்களெல்லாம் நன்மையாகவேமுடியும் என்பது நம் முன்னோர்கள் முடிவு. அம்முறையிலே நம் நாட்டில் திருப்பள்ளியெழுச்சி வழிபாடு எல்லாத் திருக்கோயில்களிலும் சிறப்பாக நிகழ்த்தப் பெறுகிறது.

தருமையாதீனத் திருக்கோயில்களிலும் மார்கழிமாத வழிபாடுகள் சிறப்பாக நிகழ்த்தப்பெறுகிறது. தருமையாதீனம் இருபத்தாறுவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தமது ஆன்மார்த்தமூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குத் திருப்பள்ளியெழுச்சி வழிபாட்டை விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நாள்தோறும்சிறப்பாக நிகழ்த்தியருளுகின்றார்கள்.

பின்னர் ஸ்ரீ ஞானபுரீசுவரர், ஸ்ரீ தருமபுரீசுவரர், ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்காம்பிகைத் திருக்கோயில்களில் வழிபாடு நிகழ்த்தி, ஆதீனத் திருக்கோயில்களுக்கும் பிற திருக்கோயில்களுக்கும் எழுந்தருளி வழிபாடாற்றி, அன்பர்களுக்கு அருட்பிரசாதம் வழங்கி ஆசியருளுகிறார்கள். ஆங்காங்கும் உள்ள மக்கள் பலருக்கும் இறை வழிபாட்டு முறையை உணர்த்தவும் அவர்களை இறைவழிபாட்டில் ஈடுபடுத்திப் பயன் பெறச்செய்யவும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பல தலங்களுக்கும் எழுந்தருளி வழிபாடாற்றியருளுகிறார்கள். மேலும் ஆதீனத் திருக்கோயில்களுக்கு எழுந்தருளும்போது ஆதீன உயர் அலுவலர்களையும் உடனழைத்துச்சென்று ஆதீனத் திருக்கோயில்களின் நிர்வாவகத்தை மேற்பார்வையிடச்செய்து நெறிப்படுத்தி யருள்வதும் குறிப்பிடத்தக்கது.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அஃவர்கள் நாள் தோறும் எழுந்தருளி நிகழ்த்தும் இச்சிறப்பு வழிபாட்டின் போது உலக நலங்கருதி சுவாமிக்கும், அம்பாளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் அருச்சனையும் நிகழ்த்துவித்து வழிபாடாற்றுகிறார்கள்.

சோழநாட்டைச் சிவாலயமாகக்கொண்டு வழிபடும் முறையில் மத்தியார்ச்சுனம் என வழக்கும் திருவிடைமருதூர்த் திருக்கோயிலையும். சூழவுள்ள திருவலஞ்சுழியை விநாயகர் தலமாகவும், சுவாமி மலையை முருகன் தலமாகவும், திருவாவடுதுறையை நந்தித் தலமாகவும் திரு ஆலங்குடியைத் தட்சிணாமூர்த்தித்தலமாகவும் சிதம்பரத்தை நடராஜப்பெருமானுக்குரிய தலமாகவும், சீகாழியைப் பைரவர் தலமாகவும், திருவாரூரைச் சோமாஸ்கந்தர் தலமாகவும், திரு ஆப்பாடியைச் சண்டேசுவரர் தலமாகவும், சூரியனார்கோயிலை நவக்கிரகத்தலமாகவும்கொண்டு விளங்கும் தலங்களையும் வழிபட்டருளுகின்றார்கள்.

வழிபாடு செய்த திருத்தலங்கள்

மார்கழி 1 – புதன்கிழமை தருமபுரம் ஸ்ரீ சித்திவிநாயகர் திருக்கோயில், மாயூரம் சின்னகடைத் தெரு விநாயகர் கோயில்

மாயூரம் ஸ்ரீ மாயூரநாத சுவாமி திருக்கோயில். 2 ஆம் நாள் மாயூரம் வள்ளலார் கோயில் ஸ்ரீ மேதா தட்சிணமூர்த்தி திருக் கோயில். 3 ஆம் நாள் திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி திருக்கோயில். 4 ஆம் நாள் திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவர சுவாமி திருக்கோயில், காரைக்கால் தருமபுரம் ஸ்ரீ யாழ்மூரி நாதசுவாமி திருக்கோயில், 5 ஆம் நாள் திருமங்கலக்குடி ஸ்ரீ புராணேசுவரர் திருக்கோயில், ஸ்ரீ சூரியனார்கோயில் திருக் கோவில், திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி திருக் கோயில், 6 ஆம் நாள் திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்க சுவாமி திருக்கோயில், ஆலங்குடி ஸ்ரீ காசியாரண்யேசுவரசுவாமி திருக் கோயில், மாயூரம் ஸ்ரீ கண்கொடுத்த விநாயகர் திருக்கோயில் 7 ஆம் நாள் வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயில் திருட்புன்கூர்த் திருக்கோயில், 8 ஆம் நாள் விளநகர் ஸ்ரீ துறை காட்டும் வள்ளலார் திருக்கோயில். 9 ஆம்நாள் தருமை ஸ்ரீஞான புரீசுவர சுவாமி திருக்கோயில், மாயூரம் ஸ்ரீ மேதா தட்சிண மூர்த்தி திருக்கோயில். 10 ஆம் நாள் சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி திருக்கோயில். 11 ஆம் நாள் தருமை ஸ்ரீ தருமபுரீசுவர சுவாமி திருக்கோயில். 12 ஆம் நாள் குத்தாலம் ஸ்ரீ உக்த வேதீஸ்வரசுவாமி திருக்கோயில். 13 ஆம் நாள் மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வர சுவாமி திருக்கோயில். 14 ஆம் நாள் திருநின்றியூர் ஸ்ரீ லெக்ஷ்மிபுரீஸ்வர சுவாமி திருக்கோயில். 15 ஆம் நாள் திருக்கோளிலி (திருக்குவளை) ஸ்ரீ தியாகராஜசுவாமி திருக்கோயில், திருக்காருயில் ஸ்ரீ நடுதறியப்பர் திருக்கோயில். 16 ம் ஆம் நாள் திருவாரூர் ஸ்ரீ தியாகராஜசுவாமி திருக்கோயில், 17 ஆம் நாள் வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயில், திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி திருக்கோயில், 18 ஆம்நாள் மாயூரம் ஸ்ரீ காசிவிசுவநாதசுவாமிகோயில், 19 ஆம் நாள் கருங்குயில்நாதன் பேட்டை ஸ்ரீ சக்திபுரீசுவரசுவாமி கோயில், மணக்குடி ஸ்ரீ சுந்தரேசுவரசுவாமிகோயில், 20 ஆம் நாள் திருவலஞ்சுழி, சுவாமிமலை, திருப்பழனம், திருவையாறு திருக்கோயில்கள், 21 ஆம் நாள் திருப்பறியலூர் (பரசலூர்) ஸ்ரீவீரட்டேசுவரசுவாமிகோயில், 22 ஆம்நாள் வேளூர் ஸ்ரீவைத் தியநாதசுவாமி திருக்கோயில், திருஇந்தளூர் ஸ்ரீ பரிமளரெங்க நாதசுவாமி திருக்கோயில், 23 ஆம்நாள் மாயூரம் - வள்ளலார் கோயில் ஸ்ரீ வதான்யேசுவரசுவாமி திருக்கோயில், திருமுல்லை வாயில் ஸ்ரீ முல்லைவனநாதசுவாமி திருக்கோயில் ஆகிய திருத் தலங்களில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழிபாடு செய்தருளினார்கள்.

(தொடரும்)

உ

எதிர்காலம்

★

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(துன்மதிஸு தைமீ 1௳ முதல் 30௳ முடிய)

(14—1—1982 முதல் 12—2—1982 முடிய)

			ரா
ல/	இராசி		
சூ. பு சு			சந்
கே		கு	செ சனி

	பு		ராகு சு
ல/ கு	அம்ஸம்		
சூ			சனி
கே	சந்		செ

ஸ்ரீ துன்மதி ஸு தை மீ 1௳ குருவாரம் பூர நக்ஷத்திரம் தைதுலைகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 7 நாழிகை 31விஞடிக்கு, கும்பலக்கினத்தில் ஸ்ரீலோகரட்சகரான சூரிய பகவான் லோக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு தனுர் ராசியிலிருந்து மகரராசி சங்கிரமணமாகத் தைமாதப்பிரவேசம் செய்கின்ருர். அன்று உத்தராயண புண்ணிய காலமாகும். சங்கிரமண கால தேவதை மந்தாகினி சுத்த ஜலத்தில் ஸ்நானம் செய்து மஞ்சள் புடவை உடுத்திக் கோரோசனை கந்தம் பூசி, மல்லிகைப்பூச்சூடி, வைர ஆபரணம் பூண்டு, மண் பாத்திரத்தில் அப்பம் புசித்து, கழுதை வாகனத்தில் வில்லும் அம்பும் ஏந்தி, பொற்குடையின் கீழ் வெண்சாமரம் வீசப்பெற்று, வைராக்கிய முகத்துடன் மேற்கு முகமாக வீற்றிருந்து, வடக்கு நோக்கிப் பயணம் செய்கிருள். அதனல் லோகத்தில் ஜனங்களுக்கு

நன்மைகள் ஏற்படும். மக்கள் அனைவரும் திரிகரண சுத்தமாக மேன்மையுற்று வாழ்வார்கள். லோகம் எங்கும் கால்நடைகளின் விருத்தி ஏற்பட்டுப் பால்பண்டங்களின் உற்பத்திபெருகி வரும். தேசங்களில் ஸ்திரீ ஜனங்கள் பலதுறை அலுவல்களிலும் ஸ்தானம்பெற்றுப் பணி ஆற்றுவர். தேசங்களில் பிரஜைகளின் தலைவர்கள் பிரதிநிதிகள் சமூக சேவை நன்குபுரிந்து பிரஜைகளின் நன்மதிப்பைப்பெறுவர். எங்கும்சுபிட்சம் நிலவும்.

உலகில் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சிவராஜயோகத்தில் விளங்குகின்ற சிவஞான குருமகான்கள் குருமகாசந்நிதானங்கள் லோகத்திற்கு நன்மார்க்கங்கள் போதித்தும் சீடர்களுக்கு ஞானவுபதேசம் செய்தும் அருள் செய்வார்கள். உலகெங்கும் சீடர்கள் மூலம் சைவசமயக்கிளை மடங்கள் ஸ்தாபித்து, சைவம் தழைக்க அனுக்கிரகம் செய் தருளுவார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகாலபூசைகள் வைதிக ஆசாரநியம விதியின்படி புனித நிறைவாக நடைபெறும். மக்கள் தெய்வசிந்தனை உடையவர் களாகி, ஆக்கப்பணிகள் பல புரிந்து க்ஷேமகரமாக வாழ் வார்கள்.

1. மேஷம் :- அசுவதி – பரணி. கார்த்திகை – ¼

(சு. சே. சோ. லா - லி. லு. லே. லோ. – அ.)

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் பண வருமானங்கள் கண்ணியத்திற்கு ஏற்ப வந்துகொண்டிருக்கும். சகோதரருக்கு அரசாங்க கௌரவம் தரும். பூமியில் செந்நெல் பிராப்தி பெருகிவரும். இராஜரீகமாக எல்லாக் காரியங்களும் வெற்றியாக நடைபெறும். வழக்கு வியாஜ்ஜியத்தில் ஜெயம் ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஜனவரி 15, 16, 17, 18, 24, 25, 26, 27, 28, 31 பிப்பிரவரி 1, 2, 4, 5, 6, 11, 12 தேதிகளில் ஜெயம், தனதானிய சேர்க்கை, சுகம் ஆகிய நற்பலன்களை யளிக்கும். ஜனவரி 20, 21 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன்தரும்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ – உரோகிணி · மிருகசீர்ஷம் ½

(இ. ஊ. ஏ. – ஒ. வ. வி. வு – வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பண வருமானம் திருப்திகரமாக வந்து

கொண்டிருக்கும். அடிக்கடி அவசிய செலவும் ஏற்படும். சகோதரருக்கு அரசாங்கநன்மை ஏற்படும். வயிற்றில் வலி அஜீர்ணம் வந்து உடன் குணமாகும். ஸ்ரீசுப்பிரமணியசுவாமிக்கு அருச்சனை செய்ய நலம் தரும். எல்லாக்காரியங்களையும் நல்ல விதத்தில் செயலாற்றுதல் ஆகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். ஜனவரி 17, 18, 19, 20, 21,27, 28, 29,30 பிப்பிரவரி 3, 4, 7, 8 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை யளிக்கும். ஜனவரி 22, 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன்தரும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾

(கா. கி. - கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் சுபபலன் தரும், குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் வந்து கொண்டிருக்கும். சகோதரருக்கு மேன்மை ஸ்திதி ஏற்படும். பூமியில் இயந்திர சாதனங்களில் விருத்திபலன் ஏற்படும். வீடு வாகன பிராப்தியில் மாறுதல் ஏற்பாடு நடக்கும். வித்தியா வியாபாராதி கலைதுறைகளில் எழுத்துமூல விஷயங்களில் அரசாங்க அனுகூலங்களை ஏற்படுத்தும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். ஜனவரி 14, 20, 21, 22, 23, 29 , 30, 31 பிப்பிரவரி 1, 2, 5, 6, 9, 10 தேதிகளில் தனுதாயம், காரியசித்தி ஆகிய நற்பலன்களை யளிக்கும். ஜனவரி 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன்தரும்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

(ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே டோ.)

கடகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் சரளமாகப் பணச்செலாவணி இருந்துவரும். பூமி இயந்திரசாதனங்களில் நற்பலன் வந்துசேரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் பிரபலம் ஏற்படும். மருந்து, இரசாயன ஆராய்ச்சி, புதுமை காணுதல் இவற்றில் மனம் செல்லும். வீடு வாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜனவரி 15, 16, 22, 23, 24, 25, 26,31 பிப்பிரவரி 1, 2, 3, 4, 7,8, 11,12 தேதிகளில் மனநிம்மதி, நல்ல தீர்மானம், தனுதாயம் ஆகிய நற்பலன்களை ஏற்படுத்தும். ஜனவரி 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன்தரும்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

(ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.)

சிம்மராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் குறிப்பிட்டுள்ள வழியில் வந்துசேரும். சகோதரருக்கு வித்துவத்துவம் தொழில் பிர விருத்திகளில் விசேஷ பலனையளிக்கும். மற்றவருக்கு ஏற்றுக் கொண்ட காரியங்களில் பொருட் செலவாயினும் நல்ல விதத்தில் சாதனையை ஏற்படுத்தும். வீடு வாகனங்களில் வசதி திருப்தியளிக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஜனவரி 14, 17, 18, 19, 25, 26, 27, 28 பிப்பிரவரி 3, 4, 5, 6, 9, 10 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜனவரி 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன்தரும்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

(டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானம் கணிசமாகவரும். நல்ல காரியங்களில் செலவும் ஆகும். தேகத்தில் உஷ்ணம், வாயு பீடிதமாகி உடன் குணமாகும். வீடு வாகனங்களில் மாறுதல் ஏற்படும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்ய ஆயாசம் அலைச்சல் நீங்கும். நலம் தரும். தாரபுத்திரர்களுக்கு சௌக்கிய பலன் தரும். ஜனவரி 15, 16, 20, 21, 27, 28, 29, 30, பிப்பிரவரி 4, 5, 6, 7, 8, 11, 12 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை யளிக்கும். பிப்பிரவரி 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதி களில் மத்திமபலன் தரும்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும் பாபிவிருத்தியில் பண வருமானம் வந்துகொண்டிருக்கும். அதற்கேற்ப செலவும் ஏற்படும். வித்தியா வியாபாராதிகளில் கலை துறையில் மேன்மை ஸ்திதியை ஏற்படுத்தும். வீடு வாகன பிராப்தியில் நவீனம் ஏற்படும். பசுபால் பிராப்தி திருப்தி யளிக்கும். புத்திரனின் தொழில்துறைகளில் ஓரளவு பணம் முடங்கும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம்நிலவும். ஜனவரி 14, 17, 18, 19, 22, 23, 24, 29, 30 பிப்பிரவரி 1, 7, 8, 9, 10 தேதிகளில்

தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். பிப்ரவரி 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன்தரும்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

(தோ. - ந. நி. நு. நே. - மதோ ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமானபலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம் நல்லவிதத்தில் வந்துசேரும். பொன் மணி பூஷணங்களையளிக்கும்.பூமியில் செந்நெல்பிராப்தி யில் நல்லஆதாயம்வரும் இயந்திரம் வாகனம் வாங்குதல் ஆகும்• தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருகஇருந்துவரும். ஜனவரி 14, 15, 16, 24, 25, 26, 31 பிப்பிரவரி 1, 2, 3, 4, 9, 10, 11, 12 தேதி களில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். பிப்பிரவரி 5, 6 தேதி கள் சத்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

(யே. யோ. பா. பி. - பு. த. ப, ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும் பாபிவிருத்தியில் பண வருமானம் கணிசமாகவரும். சகோத ரருக்கு நல்லன ஏற்படும். ஓர்புனிதஸ்தல யாத்திரை செல்லுதல் ஆகும். பூமியில் செந்நெல் பிராப்தியில் நல்ல ஆதாயம் வரும். வித்தியா வியாபாராதி கலைத் துறைகளில் பிரபல ஸ்திதியை ஏற்படுத்தும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். ஜனவரி 15, 16, 17, 18, 19, 22, 23, 27, 28 பிப்பிரவரி 3, 4, 5, 6, 11, 12 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். பிப்ரவரி 7, 8, தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன்தரும்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோண ம்- அவிட்டம் ½

(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுகநடக்கும். குடும்பாபி விருத்தியில் பணவருமானங்களில் நல்லஸ்திதியை ஏற்படுத்தும். சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். வீடு மனைவாங்கு வதில் தயக்க நிலைமையாக இருந்துவரும். எல்லாவிஷயங்களி லும் இழுக்கின்றி கௌரவ ஸ்திதியை ஏற்படுத்திவரும். சமயோ சித புத்தியையளிக்கும். புத்திரர் பௌத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம்நிலவும்.

ஜனவரி 17, 18, 19,20,21, 25, 26, 29,30. பிப்பிரவரி 5, 6, 7, 8 தேதி களில் காரியஜெயம், தனுதாயம் ஆகிய நற்பலன்களையளிக்கும். ஜனவரி 14 பிப்பிரவரி 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதி களில் மத்திமபலன்தரும்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

(கு. கே, - கோ. ஸ. ஸி. ஸூ. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் மிச்ரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் நிரந்தரவருமானம் தவிர முன்பு வரவேண்டியவை பிரயாசையில் வந்துசேருவதாகும். இராசிக்கு ஓர் விபத்து ஏற்பட்டுத்தப்பும். ஸ்ரீசுப்பிரமணியசுவாமிக்கு அருச்சனைசெய்ய நலமாகும். வீடு வாகனங்களில் நல்ல சௌகரியம்தரும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜனவரி 14, 20, 21, 22, 23, 24, 27, 28, 31 பிப்பிரவரி 1, 2, 6, 7, 8, 9, 10 தேதி களில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜனவரி 15, 16 பிப்பிரவரி 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன்தரும்.

12. மீனம்:- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

(தி. - து. ஸ. ச. த. - தே. தோ ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம் வெகுவாக வந்துகொண்டிருக் கும். பொதுநலன்களில் அதிகஈடுபாடு ஆகும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் மேன்மை ஸ்திதியும் உயர்ந்தோர் போற்று தலும் ஆகும். ஓர் புனித ஸ்தல யாத்திரை ஏற்படும். புத்திரர் பௌத்திரர்களின் சௌக்கியம் நன்றாகஇருந்துவரும். ஸ்ரீ சுப்பிர மணியசுவாமிக்கு அருச்சனைசெய்ய மனைவிக்குச் சாதாரணமாக உள்ள இரத்தபித்த மயக்கம்தீரும். ஜனவரி 14, 15, 16, 22, 23, 24, 25,29,30 பிப்பிரவரி 3, 4, 9, 10, 11,12 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜனவரி 17, 18 தேதிகளில் சந்திராஷ் டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

தைமாதச் சிறப்பு நாட்கள்

14—1—82 வியாழன், மகரரவி 7-31. உத்தராயண புண்ணியகாலம். திருவையாறு தீர்த்தம். சங்கராந்திப்பண்டிகை. கடவூர் ஸ்ரீகாலசம்காரமூர்த்தி அபிடேகம். சீகாழிஸ்ரீஉமாமகேசுவரருக்கு உச்சிக்காலத்தில் புழுகாப்பு. குத்தாலம் ஸ்ரீ சந்திரசேகரர் காவேரியில் தீர்த்தம்கொடுத்தருளல். திருவையாறு ஸ்ரீ தியாகப்பிரம்மம் 135 ஆவது ஆராதனை.

15—1—82 வெள்ளி, கணுப்பண்டிகை. மாட்டுப்பொங்கல் (கோபூஜை) வேளூர் ஸ்ரீ தையல்நாயகிக்குச் சந்தனக்காப்பும் நவசக்தி அருச்சனையும். சீகாழி, திருக்கடவூர் முதலிய தலங்களில் அம்பிகைக்கு விசேஷ அபிஷேகஆராதனைகளும் நவசக்தி அருச்சனையும் நடைபெறும். இது தைமாதம் ஒவ்வொரு சுக்கிரவாரமும் நடைபெறும். தருமை 15 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள் [குருபூஜை.

16—1—82 சனி, காளாஷ்டமி

19—1—82 செவ்வாய், வேளூரில் உண்டியல் வைத்தல். ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமிக்கும், ஸ்ரீ சண்முகருக்கும் சண்முக அர்ச்சனை. இது தைமாதம் ஒவ்வொருசெவ்வாய்க்கிழமைகளிலும் நடைபெறும். மௌனகுரு. தாயுமானவர் குருபூஜை

20—1—82 புதன், திருவிளநகர் ஸ்ரீ துறைகாட்டும்வள்ளலார் சுவாமி சம்வத்ஸராபிஷேகம்.

22—1—82 வெள்ளி, வேளூரில் ஸ்ரீ கற்பகவிநாயகருக்குத் தைமாத சுக்கிரவார உற்சவாரம்பம். பிரதோஷம்.

23—1—82 சனி, மாத சிவராத்திரி,

24—1—82 ஞாயிறு, அமாவாசை. திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி பட்டர் அருள்பெறு திருநாள்.

25—1—82 திங்கள், சோமவார அமாவாசைப் பிரதக்ஷிணம்.

26—1—82 செவ்வாய். குடியரசுதினம்.

29—1—82 வெள்ளி, வேளூர் ஸ்ரீகற்பகவிநாயகர் தைமாத சுக்கிரவார உற்சவ பூர்த்தி. குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி சம்வத்சராபிஷேகம்.

31—1—82 ஞாயிறு. வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி கடைச் செவ்வாய் உற்சவாரம்பம். ரதசப்தமி.

2—2—82 செவ்வாய். வேளூர்க் கிருத்திகை. தருமபுரம் ஸ்ரீ சண்முகர் கிருத்திகை அபிஷேகம். கிருத்திகை விரதம்.

4—2—82 வியாழன். தருமை ஸ்ரீ அஷ்டாதசபுஜமகாலக்ஷ்மிதுர்க்காம்பிகைக்குச் சம்வத்சராபிஷேகம். மகாப்பிரதோஷம்.

7—2—82 ஞாயிறு. தைப்பூசம். புஷ்ய உற்சவ தீர்த்தம். வடலூரில் இராமலிங்க சுவாமிகள் ஜோதிதரிசனம்.

8—2—82 திங்கள், பௌர்ணமி விரத பூஜை. மாத பூஜையில் தேன் அபிஷேகம். ஆயில்யவிழா.

9—2—82 செவ்வாய், வேளூர் ஸ்ரீசெல்வமுத்துக்குமாரசுவாமி கடைச் செவ்வாய் உற்சவ தீர்த்தம். கடவூர் ஸ்ரீ முனிசுவரபூஜை.

11—2—82 வியாழன், சங்கடஹர சதுர்த்தி ஆலவேலி ஸ்ரீ சித்தி விநாயகர் சம்வத்ஸராபிஷேகம்.

12—2—82 வெள்ளி, போளம் ஸ்ரீ சுயம்புநாத சுவாமி சம்வத்ஸராபிஷேகம். கும்பரவி 34-47. விஷ்ணுபதி புண்யகாலம். திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம்.

சிவநாமாவளி இசைப்பாடல்

திருமுறைக்கலாநிதி,

வேலூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.

இராகம் - பாகேஸ்வரி] [ஆதிதாளம் - திஸ்ர நடை

சிந்தையுருகிச் சிவன்திரு நாமம் மொழிவாயே
சிவசிவஎன நீறணிந்து நலம்பெறுவாயே (சி)

1 வந்தவினை களைந்திடுவான் வைத்தியநாதன்
மண்ணில் என்றும் நல்லவாழ் வளித்திடும் ஈசன் (சி)

2 தையலம்மை யோடமர்ந்து தண்ணருள் தருவான்
தஞ்சமென் றடைந்தவர்தம் நெஞ்சம் வருவான் (சி)

3 பிறைசூடும் பெருமான் வெள்ளைவிடை யேறுபவன்
பிரியங்கொள்வார் உள்ளம் பிரியானவன் (சி)

4 மாலும் அயனுங்காணா மலையன் சடையன்
மாதொரு பாகன்புள்ளி மான்தோ லுடையன் (சி)

5 வேதம் பணிநாதன் வேளூருறை வேந்தன்
விரும்பியே சடாயு வழிபட அருள்ஈசன் (சி)

6 பாலன் மார்க்கண்டனுக்காக் காலனைக் கடிந்தான்
பரவைமனைக்கே இரவில் தூது நடந்தான் (சி)

7 முத்துக் குமரனைப்பெற்ற நெற்றிக் கண்ணன்
முதுதமிழ் ஆராயும் செஞ்சடை முடிவண்ணன் (சி)

8 சொற்பதங் கடந்த தூயநற் சோதி
தொண்டர்க்குத் தொண்டராகி வரும்பெருஞ் சோதி (சி)

9 அனலேந்தி அம்பலத்தில் ஆடிடும் அய்யன்
அன்புகொள்ளும் அடியார்நெஞ் சகலா மெய்யன் (சி)

10 ஆலகால விடந்தனையே அள்ளி உண்டான்
அன்றுநீல கண்டன்எனும் நாமங் கொண்டான் (சி)

11 காழிப்பிள் ளைக்குப்பால் கொடுத்திடச் செய்தான்
கனிதமிழ்ப் பாடல் செவிகேட்டுக் களிப்புற்றான் (சி)

12 நற்றமிழும் நற்றிறனும் நாடறிந் துய்ய
நற்றிருநா வுக்கரசை நமக்கே அளித்தான் (சி)

13 வழக்கிட்ட வன்தொண்டனை அடிமை கொண்டான்
வையகத்தில் சைவம் தமிழ்வளரச் செய்தான் (சி)

14 விடையேறும் பெருமானை விரும்பிநீ வாழ்வாய்
வேண்டும்வரம் யாவும்பெற்று உலகில் உய்வாய். (சி)

Printed & Published by V. Ramaiah Pillai, Manager, Dharmapuram
at the Gnanasambandam Press Dharmapuram, Mayuram. 10-1-82